**கவனிக்க.**- 2025.11.07 ஆந் திகதிய 2462 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2463 - 2025 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2025.11.14

2463 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2216 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2233 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோரால**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2213 - B 82737- 403 (2025/11)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பகிரங்க சேவை ஆணைக்குழு

பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நிலவும் அலுவலக ஊழியர் சேவை தரம் III பதவியின் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

02. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஏற்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் அவற்றை இட்டு அனுப்பி வைக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " அலுவலக ஊழியர் சேவை தரம் III பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிட்டு 2025.12.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும், பின்வரும் தொடுப்பு ஊடாக உள்ளடக்கப்பட்டுள்ள Google Form ஐயும் உரியவாறு பூரணப்படுத்தல் கட்டாயமாகும். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு,
1200/9, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்ல.

Google Form - https ://forms.gle/LWiFfexSXw7xiUtm8

03. **பதவியின் தன்மை மற்றும் பணிக் கட்டமைப்பு** :

I. இந்தப் பதவியானது ஆரம்ப, தொழில்நுட்பம் அல்லாத வகுதியைச் சேர்ந்த பதவியாகும்.

II. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித் துடையது. (ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு உட்பட்டது.)

III. பதவிக்குத் தெரிவு செய்யப்படுவோர் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். தாங்கள் காலத்துக்குக் காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவுத் தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

IV. நியமனத்தைப் பொறுப்பேற்ற தினத்திலிருந்து 03 வருட தகுதிகூர் நிலைக் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் உரியவாறு வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

V. சகல கடமை நாட்களிலும் மு. ப. 8.00 தொடக்கம் பி. ப. 4.45 வரை கடமையில் ஈடுபடல் வேண்டும். மேலும், இந்தப் பதவிக்குரிய கடமைப் பொறுப்புக்களுக்கு அமைய எந்தவொரு தினத்திலும் கடமை நேரத்திற்கு அப்பால் கடமைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்படல் வேண்டும்.

VI. 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய உரிய மற்றைய அரசகரும மொழியில்/ அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

VII. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்கு விதிகள், சுற்றுநிருப அறிவுறுத்துரைகள் என்பனவற்றுக்கும் காலத்துக்குக் காலம் அவற்றுக்கு வழங்கப்படும் திருத்தங்ளுக்கும் அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

04. **பதவிக்குரிய பணி :**

நிறுவனங்களில் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் பேணிச் செல்வதற்கான பொதுவான அடிப்படைத் தேவைகளுள் திட்டவட்டான பகுதி யளவிலான தொழில்நுட்பத் திறமையேனும் இன்றி நிறைவேற்றக்கூடிய அடிப்படைப் பணிகள் கையளிக்கப்படும் பல்நோக்கு சேவை வகுதியாகும். இந்தப் பணி நோக்கெல்லையில் உள்ளடங்கும் எந்த வொரு பணியும் நிறுவனத் தலைவர்/ நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் இந்த சேவை வகுதிக்குக் கையளிக் கப்படும்.

*உதாரணங்கள் :*

I. திறப்புக் கடமை கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங் களில் மு. ப. 8.00 மணிக்கு முன்னர் அலுவலகத்தைத் திறத்தல்.

II. உத்தியோகத்தர்கள் வருகை தருவதற்கு முன்னர் அலுவலக அறைகள் உள்ளடங்கலாகப் பிரிவின் சுத்திகரிப்புப் பணிகளை அவதானித்தல்.

III. கிளைகளுக்கிடையே கோவைகளைக் கொண்டு செல்லல்.

IV. நிழற்பிரதிகளை எடுத்தல் மற்றும் தொலைநகல் இயந்திரத்தை இயக்குதல்.

V. மாலையையில் சகல உத்தியோகத்தர்களும் அலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றதன் பின்னர் அனைத்துவளிசீராக்கிஇயந்திரங்களையும், மின் குமிழ்களையும் செயலிழக்கச் செய்தல், அனைத்து யன்னல்களும் கதவுகளும் உரிய முறையில் மூடப்பட்டுள்ளன என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளல்.

VI. கணினிகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உப கரணங்கள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளல்.

05. **சேவை நிபந்தனைகள் :**

I. ஆகக் குறைந்தது 03 வருடங்கள் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு இணைப்பு செய்யப்பட்டு சேவையாற்றுதல் வேண்டும்.

II. இந்த நியமனம் தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந் தனைகள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடு கள் மற்றும் அலுவலக ஊழியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடங்கியுள்ள விடயங்களும் ஏற்புடையதாகும்.

06. **ஆட்சேர்ப்புத் தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

III. நல்லொழுக்கமுள்ளவராகவும் சிறந்த உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

IV. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

V. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் Vஆம் அத்தியாயத்திற்கு அமைய அரசாங்க சேவையில் நியமனம் பெறுவதற்குத் தகுதியற்ற ஒருவராக இருத்தல் ஆகாது.

VI. சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

VII. விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் மொழிமூலமே தாங்கள் நியமனத்தைப் பெறுவதற்குத் தகைமை பெறும் மொழிமூலமாகும்.

07. **ஆட்சேர்ப்பு முறை :**

I. நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் 12 பரீட்சார்த்திகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டு வெற்றிடங் களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

*குறிப்பு* - பதவிக்குப் பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளிக்களச் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், குறித்த தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று செல்லுபடியாதல் வேண்டும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி வழங்கல் திட்டம்

| *நியதிகள்* | | *புள்ளிகள்* |
|---|---|---|
| பெற்றுக்கொண்டுள்ள தொழில்சார் தகைமைகள் | | 5 |
| தொடர்பாடல் திறன் | | 10 |
| கல்வித் தகைமைகள் | க. பொ. த. (உ. த.) சித்தியடைந்திருத்தல் | 5 |
| | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், மொழி, இரண்டாம் அரச கருமமொழி, ஆங்கில மொழி மற்றும் வேறு மொழிகளில் சித்தி பெற்றிருத்தல். (ஒரு மொழிக்கு 02 புள்ளிகள் வீதம் உச்ச பட்சம் 05 பாடங்கள் கருத்திற் கொள்ளப் படும்) | 10 |
| ஆளுமை | | 5 |
| வெளிக்களச் செயற்பாடுகள் (விளையாட்டு / சமூக சேவை ............ போன்ற) | | 5 |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமைகள் | | 10 |
| மொத்தப் புள்ளிகள் | | 50 |

III. இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி தீர்மானிக் கப்படும்.

08. **சம்பளம்:**

I. சம்பளக் குறியீடு - PL -1-2025

II. சம்பள அளவுத்திட்டம் ரூபா 40,000 - 10 x 450 - 10 x 490 - 10 x 540 - 12 x 590 - ரூ. 61,880 (பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை III இற்கு அமைய உரிய சம்பளம் கணக்கிடப்படும்.)

09. **விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் :**

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

i. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்திய பிரதி;

ii. தேசிய ஆள் அடையாள அட்டையின் / செல்லு படியான கடவுச்சீட்டின் உறுதிப்படுத்திய பிரதி;

iii. கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகள்;

iv. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் (DS 04 படிவம் மூலம்);

v. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர் பில் பொலிஸ் இசைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கூட்டிய முடிவின் அடிப்படையில் உரிய தினத்தன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆயினும், அவ்வாறு அழைக்கப்படுவது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரகமாகக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கவில்லையெனத் தெரியவருமிடத்து அவரது பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படும்.

11. சகல விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது விதிகளுக்கு அமைய செயற்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

12. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

தாங்கள் அனுப்பி வைத்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானது அல்லது தவறானது என்பது ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது தகைமை இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவருமிடத்து அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வகையில் பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. வெற்றிடங்களை நிரப்பும் அல்லாது நிரப்பாதிருக்கும் உரிமை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தைச் சாரும்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாகசப் பகுதிகளில் ஏதேனும் இணக்கமின்மை அல்லது முரண்பாடு ஏற்படுமிடத்து சிங்கள மொழிப் பகுதி மேலோங்கி நிற்றல் வேண்டும்.

15. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏதேனும் சிக்கலான நிலைமை ஏற்படுமிடத்து அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின்
பணிப்பிற்கமைய,

செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

பகிரங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 1200/9,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்ல,
2025, ஒற்றோபர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் அலுவலக ஊழியர் சேவை தரம் III பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

அலுவலக உபயோகத்திற்கு

| | | |
|---|---|---|
| விண்ணப்பிக்கும் மொழிமூலம் | சிங்களம் | |
| | தமிழ் | |
| | ஆங்கிலம் | |

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :...............................................................

02. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் :...............................................................

03. நிரந்தர முகவரி :...............................................................

04. நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் பிரிவு :...............................................................

05. கிராம அலுவலர் பிரிவு :...............................................................

06. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

07. தொலைபேசி இலக்கம் :

08. பால் : ஆண் - 0, பெண் - 1

09. திருமணமானவர்/ திருமணமாகாதவர் :...............................................................

10. பிறந்த திகதி : வருடம் : மாதம் : திகதி :

11. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு (2025.12.05 ஆந் திகதியன்று) வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

12. கல்வித் தகைமைகள் :

12.1. க. பொ. த. (சா.த.) பரீட்சை முதல் அமர்வின் பெறுபேறுகள்
வருடம் : ..................................... மாதம் :.............................. சுட்டெண் :.........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

12.2. க. பொ. த. (சா.த.) பரீட்சை இரண்டாம் அமர்வின் பெறுபேறுகள்
வருடம் : ........................... மாதம் :............................................ சுட்டெண் :..................................................

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

12.3. க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை பெறுபேறுகள்
வருடம் : .................................. மாதம் :................................................. சுட்டெண்: ........................................

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| | |
| | |
| | |

13. வேறு தகைமைகள் : ....................................................................................................................................
..................................................................................................................................................................

14. பதவிக்கு அமைவாகப் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் : ..................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

15. விளையாட்டு மற்றும் வெளிக்களச் செயற்பாடுகள் : ........................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

16. தாங்கள் எப்போதாவது ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

(ஏற்புடைய கூட்டில் ✓அடையாளம் இடவும்) (ஆம் எனில், தகவல்களைத் தருக) ஆம் ☐ இல்லை ☐

17. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

i. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதேனும் பகுதிகளை நிரப்பாமல் மற்றும்/ அல்லது தவறாக நிரப்பியதன் காரணமாக ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்க உடன்படுகின்றேன்.

ii. என்னால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனம் பெறுவதற்கு முன்னரெனின் தகைமையற்றவராக்கப்படுவேன் என்றும் நியமனத்தின் பின்னர் எனின் பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

iii. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி .......................................

18. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ............................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் ................................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

……………………………………………………

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : .....................................................

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் : ....................................................

பதவி : ....................................................

முகவரி : .....................................................

(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

11-149

---

## இலங்கைப் பாராளுமன்றம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதியில் காணப்படும் பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025.12.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் “பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

1. **நூலக உதவியாளர்** (பதவி வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை– 03)

1.1 **சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆந் திகதிய 04/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் Iஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 51,020 - 11 x 590 - 10 x 680 - ரூபா 64,310.00 ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 89,000.00 ஆகும்).

1.2 **வயதெல்லை:**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் / அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

1.3 **தகைமைகள்:**

1.3.1 **கல்வித் தகைமைகள்** : க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தியும், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதப் பாடத்தில் சித்தியும் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

1.3.2 **தொழில் தகைமைகள்:** பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்று /அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் வழங்கப்படும் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் பற்றிய டிப்ளோமாவின் முதலாவது பகுதியை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

1.3.3 **அனுபவம்:** அரசாங்க நூலகமொன்றில்/ பாராளுமன்ற நூலகத்தில் ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 **ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்து / தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.5 **பரீட்சை நடவடிக்கை முறை:**

1.5.1 *எழுத்து / தொழில்சார் பரீட்சை*: விண்ணப்ப தாரர்கள் தொழில்சார் பணிப்பொறுப்புகள் தொடர்பாக கொண்டிருக்கும் அறிவும் புரிந்து கொள்ளலும் பரிசீலிக்கப்படுவதுடன், இப் பரீட்சையில் அதிகபட்சமாக பெற்றுக் கொள் ளக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

1.5.2 *நேர்முகப் பரீட்சை*: பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரசீலிக்கப்படும்.

1.5.3 எழுத்து / தொழில்சார் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப்படும். இவற்றில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| | |
|---|---|
| i | மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| ii | கணினி அறிவு |
| iii | தொழில்சார் அனுபவம் |
| iv | தொடர்பாடல் மற்றும் மொழித்திறன் |
| v | நேர்முகப் பரீட்சையில் வெளிப் படுத்தும் திறன்கள் |

2. **வரவேற்பாளர் (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 03)**

2.1 **சம்பள அளவுத் திட்டம்:**

2025.03.25 ஆந் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 51,020 – 11 x 590 - 10 x 680 - ரூபா 64,310.00 ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் ரூ. 89,000.00 ஆகும்).

2.2 **வயதெல்லை:**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 35 வய துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

2.3 கல்வித் தகைமைகள்: கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2.4 **தொழில் தகைமைகள்:**

அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழம் ஒன்றிலி ருந்து அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அரசாங்க நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற ஓராண் டுக்கும் குறையாத கற்கைக் காலத்தைக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமாச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்;

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணினிக் கல்வி தொடர்பான கற்கை நெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ்ப் பெற்றிருத்தல் வேண்டும்.

- தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தொடர்பாடல் திறன் மற்றும் பிற நாட்டு மொழிகளில் பேசும் ஆற்றல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

2.5 **அனுபவம்:**

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனமொன்றில் வரவேற்பாளர் / வாடிக்கையாளர் சேவை அலுவலர் பதவியில் (01) வருட கால அனுபவத்தைப் பெற் றிருத்தல் வேண்டும்.

**விதிவிலக்கு:**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதியில் 10 (பத்து) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள, A,B மற்றும் C ஆகிய சம்பள வகுதிகளுக்குரிய பணியாளர்கள் மேலே 2.5ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் அவசியமற்றது.

2.6 **ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்துப் பரீட்சை, பேச்சுப் (உரையாடல்) பரீட்சை நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

(அ) எழுத்துப் பரீட்சை

| *பரீட்சை* | *பரிசீலிக்கப்படும் விடயப் பரப்புகள்* |
|---|---|
| எழுத்துப் பரீட்சை | ஆங்கில மொழியறிவும் பொது அறிவும் |

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்ப தாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவதுடன், நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப் படும். இவற்றில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிக பட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| | *அளவுகோல்கள்* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு, பேசும் திறன் மற்றும் அனுபவம் |
| 3 | கணினிக் கல்வியறிவு |
| 4 | ஆளுமை / நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |
| 5 | வரவு, மூப்புரிமை மற்றும் செயலாற்றுகை (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கானது) |

3. சாரதி பதவி - **[வெற்றிடங்களின் எண்ணிக்கை 02]**

3.1 **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 51,020 - 11 x 590 - 10x 680 - ரூபா 64,310.00 (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 89,000.00) ஆகும்.

3.2 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

3.3 **கல்வித் தகைமைகள் :**

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.4 **தொழில்சார் தகைமைகள் :**

கனரக வாகனங்கள் அடங்கலாக அனைத்து வகுப்பு மோட்டார் வாகனங்களையும் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும். (விண்ணப்பதாரிக்கு வாகனங்களில் அன்றாடம் ஏற்படும் சிறு திருத்தங்களைச் செய்துகொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும். மோட்டார் வாகன இயந்திரவியல் பற்றிய அறிவுள்ள, விடுமுறை நாட்கள், வார இறுதி நாட்கள் மற்றும் சாதாரண கடமை நேரங்களுக்கு அப்பால் கடமையாற்றும் ஆற்றல் உள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.)

3.5 **அனுபவம் :**

அரசாங்க நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சாரதியாக 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

3.6 **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துமூல / செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்.

3.7 **பரீட்சை நடைமுறை :**

விண்ணப்பங்களில் இருந்து, ஆட்சேர்ப்புக்கான அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்பின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

(அ) **எழுத்துமூல/ செயன்முறைப் பரீட்சை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் ஒரு மேற்பார்வைக் குழுவினால் அல்லது தெரிவுசெய்யப்படும் தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் எழுத்துமூல /செயன்முறைப் பரீட்சை நடத்தப்படும். அதன்போது பின்வரும் விடயப் பரப்புகளின் கீழ் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

| *பரீட்சை* | *பரீட்சிக்கப்படும் விடயப் பரப்புகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|
| எழுத்து மூலப் பரீட்சை | வீதிச் சட்டங்கள் பற்றிய நடைமுறை அறிவு/ மோட்டார் இயந்திரவியல் பற்றிய அறிவு/ பொது அறிவு | 100 |
| செயன் முறைப் பரீட்சை | வாகனம் செலுத்தும் திறமை / உடற்தகுதி | 100 |

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

எழுத்துமூல/ செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவு

கோல்களின்படி புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1 | தொழில்வாண்மை மற்றும் ஆளிடைத் திறன்கள் |
| 2 | அனுபவம் |
| 3 | மொழித் தேர்ச்சி மற்றும் தொடர்பாடல் திறன் |
| 4 | மனோபாவம் மற்றும் ஆளுமை |
| 5 | வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் கடமையாற்றும் ஆற்றல் |

4. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரித்துடையது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் பாராளு மன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் தொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்பு களுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள் பற்றிய ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையைச் செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் நியமிக்கப் படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். தேவைப்படுத்தப்படும்போது மட்டும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்
(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள்
(ஈ) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்

6. சாரதி பதவிக்கான விண்ணப்பதாரர்கள் மட்டும் மேலே குறிப்பிட்ட 5 (அ) முதல் (ஈ) வரையிலான சான்றிதழ்களுக்கு மேலதிகமாக, அனைத்து வகையான வாகனங்களையும் ஓட்டுவதற்குச் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றையும் இணைக்க வேண்டும்.

7. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணி யாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங் களை தத்தமது திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

8. பதவியைப் பெற ஏதாவது ஒரு விதத்தில் அழுத்தம் செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

9. விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் எனக் குறிப்பிடப் படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

10. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றி தழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத (தற்பொழுது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/ நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற) அல்லது மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2025, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

**.......................................................... பதவி**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) : ..........................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில் / தமிழில்) : ..........................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (Mr./Mrs./Miss) : ..........................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி :..............................................................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(iii) WhatsApp தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(iv) மின்னஞ்சல் முகவரி (E-mail) : ..............................................................................

(ஆ) (i) அலுவலக முகவரி : ...................................................................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக.

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி : ஆண்டு : ........... மாதம் : .................... திகதி: .......................
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் :........... மாதங்கள் :.............. நாட்கள்:..............

5. விவாக நிலை : (விவாகமானவர்/ விவாகமாகாதவர்) :............................................................

6. பாலினம் : (பெண்/ஆண்)

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/இல்லை)

8. கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *க.பொ.த. (சா./த)* | | |
|---|---|---|
| *பாடம்* | *பெற்ற சித்தி* | *ஆண்டு* |
| சிங்களம்/தமிழ் | | |
| ஆங்கிலம் | | |
| கணிதம் | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| *அனுபவம் (சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)* | | |
|---|---|---|
| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
| | | |
| | | |

9. தொழில் தகைமைகள் :
.............................................................................................................................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

10. தற்போதய தொழில் பற்றிய விபரம்:-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :.............................................................................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:-.....................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி:-..................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்:-.........................................................................................

(உ) கொடுப்பனவுகள்:-...............................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம்:-........................................................................................................

11. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங் காணப்பட்டுள்ளீர்களா? அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

12. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா?
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக.
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் தவறானது அல்லது பொய்யானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி:........................................ ...........................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில் ............................................................................................ பதவியை வகிக்கின்ற திரு./திருமதி/ செல்வி........................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை, இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது. இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என உறுதிசெய்கின்றேன். இவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது.

திகதி.............................. .................................................................

திணைக்கள / நிறுவன தலைவரின்
கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

11-262

---

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்பவியலாளர் சேவை வகைக்குரிய பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் – 2025**

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளில் தரம் III இன் பேச்சு சிகிச்சையாளர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்பவியலாளர் சேவை வகைக்குரிய பேச்சு சிகிச்சையாளர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர்புடைய பாடப்பிரிவில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த பட்டதாரிகளிடமிருந்து எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டு பெறப்படும் பெறுபேறுகளின் அடிப்படையில் பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. **பதவி தொடர்பான கல்வி மற்றும் பிற விஷேட தகுதிகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பேச்சு மற்றும் மொழி சிகிச்சை தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பட்டமாக இருந்தால், அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பேச்சு மற்றும் மொழி சிகிச்சைப் பட்டம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

இலங்கை மருத்துவ கவுன்சிலில் (SLMC) பதிவு செய்திருத்தல் வேண்டும்.

3. **பிற பொதுவான தகுதிகள்:**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் உடல் ரீதியாகவும் மற்றும் மன ரீதியாகவும் தகுதியினை கொண்டவராக இருக்க வேண்டும்.

(ஆ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்புடைய வர்களாக இருக்க வேண்டும்.

(ஈ) ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(உ) 2025.12.01 ஆம் திகதியில் உள்ளவாறு 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவிப்பில் குறிப் பிடப்பட்டுள்ள திகதியில் உள்ளவாறு விண்ணப்ப தாரர்கள் அனைத்து தகுதிகளையும் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (சம்பந்தப்பட்ட பட்டம் அமுலுக்கு வரும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதித் திகதியாகவோ அல்லது அதற்கு முந்தைய திகதியாகவோ இருத்தல் வேண்டும்)

4. **ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் பரீடசை :**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்து, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் பொது அறிவு மற்றும் நுண்ணறிவு தொடர்பாக ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் தகுதி வரிசையின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் உடல் தகுதி மற்றும் தகுதியை சரிபார்ப்பதற்காக நேர்முகப்பரீட்சை ஒன்று நடத்தப்பட்ட பின்னர், ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

| *வினாத் தாள்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *அதிக பட்ச புள்ளி கள்* | *சித்தி பெறுவ தற்கான புள்ளி கள்* |
|---|---|---|---|---|
| நுண்ணறிவு | இந்த வினாத்தாள், வசன எண்கள் மற்றும் உருவக வடிவில் வழங்கப்படும் பிரச்சினைகள் குறித்து விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் முடிவுகள் மற்றும் பதில்களின் அடிப்படையில் அந்த பிரச்சினைகள் குறித்து விண்ணப்பதாரரின் புரிந்து கொள்ளும் திறன், விண்ணப்பதாரர்களின் அனுமானத்தை அள விடுதல் மற்றும் நேரம் மற்றும் இடைவெளி இடையேயான தொடர் புகளை புரிந்து கொள் ளுதல் போன்றவற்றில் ஒரு விண்ணப்பதாரரின் திறனை அளவிடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது | 01 மணித் தியாலம் | 100 | 40 |
| பொது அறிவு | பேச்சு சிகிச்சையாளர் பதவியுடன் தொடர் புடைய விடய அறிவைத் தொடர்புபடுத்தி தர்க்க ரீதியான பகுத்தறிவை முன்வைத்தல் மற்றும் பொது அறிவை பரி சோதிப்பதற்காக இந்த வினாத்தாள் வடிவமைக் கப்படும். | 01 மணித் தியாலம் | 100 | 40 |

5. **நேர்முகப் பரீட்சை :**

ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் தொடர் புடைய வினாத்தாள்களில் தோற்றிய விண்ணப்ப தாரர்களில், ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரமே அவர்களால் பெறப்பட்ட புள்ளிகளின் தகைமை வரிசையின் அடிப்படையில் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப்பரீட்சைக்கான திகதியை சுகாதார அமைச்சின் செயலாளரே முடிவு செய்வார். மேலும், இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளும் அனைவரும் பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என இதில் உள்ள எந்தப் பிரிவும் குறிப்பதாகவோ அல்லது பொருள்படுத்துவதாகவோ கருதப்படாது.

குறிப்பு: சுகாதார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு செயலாளரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்று நடத்தப்படும். பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட தகுதிகள் மற்றும் உடல் தகுதி ஆகியவற்றை நேர்முகப் பரீட்சை குழு சரிபார்க்கும்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இந்த அறிவிப்பில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப் பத்தின் மாதிரி படிவத்தின்படி A4 அளவிலான தாள்களைப் பயன்படுத்தி விண்ணப்பம் தயாரிக் கப்பட வேண்டும்.

(ஆ) பட்டப்படிப்பு சான்றிதழ் மற்றும் GPA மதிப்பைக் குறிக்கும் சான்றிதழ்களின் உண்மையானது என விண்ணப்பதாரரால் சுய சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரரால் உண்மையானது என சான்றளிக்கப்பட்ட இலங்கை மருத்துவ கவுன்சிலின் (SLMC) பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் இல.7041318 என்ற "சுகாதார செயலர் – பரீட்சைக் கட்டணம் வசூலிப்பு" என்ற கணக்கில் வரவு வைப்பதற்கு ரூ. 1000.00 செலுத்தி பெறப்பட்ட ரசீது, விண்ணப்பத்தில் "ரசீது" என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட வேண்டும். (தயவுசெய்து ரசீதின் பிரதி ஒன்றை உங்களுடன் வைத்துக்கொள்ளவும்)

(உ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் ஒரு அரச பாடசாலையின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் அல்லது சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படைகளில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யக்கூடிய பதவி ஒன்றை வகிக்கும் அதிகாரி அல்லது ஆண்டுக்கு ரூ. 512,148.00 க்கு மேல் திரண்ட சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவி நிலை தரத்தில் உள்ள அலுவலர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஊ) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 9x4 அளவு கொண்ட கடித உறையில் இட்டு அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்பவியலாளர் சேவை வகைக்குரிய பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் – 2025" எனவும், தொடர்புடைய பட்டம் மற்றும் கல்வியாண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு 2025.12.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்)-02, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, "சுவசிரிபாய", 385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை, கொழும்பு - 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பு – மேற்படி இல. 2 மற்றும் 3 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் பிற அனைத்து தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதியான 2025.12.01 ஆம் திகதியில் உள்ளவாறு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. அரசாங்க அல்லது அரசாங்க சார்பு நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களின் விண்ணப்பங்கள், அவர்களின் திணைக் களத் தலைவரூடாக அனுப்பப்பட வேண்டும்.

8. இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்காத, முழுமையாக பூர்த்தி செய்யாப்படாத, மாதிரி படிவத்திற்கு இணங்காத, அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத, வங்கியிலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2025.12.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். மற்றும் விண்ணப்பங்கள் பெறப்பட்டதற்கான அறிவிப்பு எதுவும் அனுப்பப்படமாட்டாது.

9. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்:**

(அ) சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ஆ) எழுத்துப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக, ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவை ஏற்றுக்கொள்ளப்படும்.

10. **நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு:**

பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்துப் பரீட்சையில் தோற்றி அதில் தேர்ச்சி பெற்று தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது, சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் மற்றும் அதன் சான்றளிக்கப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்;

(2) பட்டச் சான்றிதழின் மூலப் பிரதி (அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்);

(3) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்;

(4) வசிப்பிடத்தை உறுதி செய்வதற்காக கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (கிராம அலுவலர் சான்றிதழ்);

(5) இலங்கை மருத்துவ கவுன்சிலின் (SLMC) பதிவுச் சான்றிதழ் (விண்ணப்பத்துடன் அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்)

11. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகள்:**

பேச்சு சிகிச்சையாளர் பதவியில் நிரந்தர நியமனங்களை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்தால், ஆட்சேர்ப்பு திட்டத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில், விண்ணப்பதாரரகளை அந்த பதவியின் தரம் III க்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் எழுத்துத் பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படும் இடம் தீர்மானிக்கப்படும். பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன்படி, MT-06-2025 இற்கமைய ரூ. 54,120 - 10 x 800 - 11 x 1190 - 10 x 1320 - 10 x1350 - ரூபா 101,910.00 சம்பள அளவு பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு ஏற்புடையதாகும். மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் விதிமுறைகளின்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

12. விண்ணப்பத்தில் கல்வி மற்றும் பிற தகுதிகள் பற்றிய விவரங்கள் கவனமாகவும், சரியாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். தகுதியை நிரூபிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் நியமனத்திற்குப் பின்னர் போலியானவை என கண்டறியப்பட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் நியமனத்தை இரத்துச் செய்து பதவி நீக்கம் செய்யவும், மேலும் இது சம்பந்தமாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்த பின்னர் பொதுச் சேவையில் மீண்டும் பணியமர்த்த அனுமதிக்கப்படாதவர்களின் கறுப்புப் பட்டியலில் அவரது பெயரை உள்ளிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், நியமனம் செய்யப்பட்ட முதல் மாத காலப் பகுதியினுள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றத் தகுதியானவர் என்பதற்கான சான்றிதழைப் பெற வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என கண்டறியப்பட்டால், அவர் அந்த பதவியில் நீடிக்க தகுதியற்றவர் ஆவார்.

14. மேற்கண்டவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவரும் அரசாங்க அலுவலர்களுக்கு ஏற்புடையதான அனைத்து விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் விதிக்கப்படும் கொள்கைகள், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பிற ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

15. இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் ஏதேனும் சிக்கல் நிலைமை ஏற்பட்டால், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். மேலும், இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு இருந்தால், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி காணப்படும்.

விஷேட வைத்தியர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
“சுவாசிரிபாய”,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10,
2025, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவை வகைக்குரிய பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2025**

(விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.)

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில); உ+ ம் : A. B. C. SILVA
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .........................................................................
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-........................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இல. : ....................................................... (பிரதியொன்றை இணைக்கவும்)

3. தபால் முகவரி : சிங்களத்தில் /தமிழில் ஆங்கிலத்தில்
...................................... ..........................................
...................................... ..........................................
...................................... ..........................................
...................................... ..........................................

4. (அ) நிரந்தரமுகவரி : சிங்களத்தில் /தமிழில் ஆங்கிலத்தில்
...................................... ..........................................
...................................... ..........................................
...................................... ..........................................
...................................... ..........................................

(ஆ) தொலைபேசி இலக்கம் : கையடக்க: | | | | | | | | | | |

நிலையான: | | | | | | | | | | |

(இ) வதிவிட மாவட்டம் : சிங்களத்தில் /தமிழில் : .......................... ஆங்கிலத்தில் : ..........................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ? ஆம்/இல்லை : ……………………..

(உ) ஆம் எனின், எவ்வளவு காலம் தொட்டு :-..........................................................................................

5 பிறந்த திகதி : ஆண்டு : .......................... மாதம் : .......................... திகதி : .........................................

2025............. ஆந் திகதியன்று வயது : வருடங்கள் : ...................... மாதங்கள்: ........................ நாட்கள்

6. பால் : ஆண்: ☐ பெண்: ☐ (உரிய கூட்டில் "✓"எனும் குறியீட்டை இடவும்)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா? ஆம்: ☐ இல்லை : ☐ (உரிய கூட்டில் "✓" எனும் குறியீட்டை இடவும்

8. விவாக நிலைமை: விவாகமானவர்: ☐ விவாகமாகாதவர்: ☐

(உரிய கூட்டில் "✓" எனும் குறியீட்டை இடவும்

9. கல்வித் தகைமைகள் :

| *குறியீட்டு. இல.* | *சித்தியடைந்த பட்டம்* | *தரம்* | *தரத்தின் புள்ளி மதிப்பீடு (GPA) மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி* | *பல்கலைக்கழகம்* | *கல்வியாண்டு* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. SLMC இன் பதிவு இலக்கம் மற்றும் திகதி:

11. நீங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை பெற்றிருக்கிறீர்களா?
ஆம் : ☐ இல்லை : ☐

(பொருத்தமான கூட்டில் "✓" எனும் குறியீட்டை இடவும்.

ஆம் எனில், விவரங்களைத் தரவும்: ..........................................................................................................
……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………...........................................................

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த வர்த்தமானி அறிவித்தலை நான் கவனமாக வாசித்து புரிந்துகொண்டேன் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இந்த விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட்டதென்றும் இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்தவரை உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழை அல்லது தவறு எனக் கண்டறியப்படுமிடத்து நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் நன்கறிவேன்.

| |
|---|
| இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையில், இல. 7041318 எனும் "சுகாதார செயலாளர் பரீட்சைக் கட்டணம் சேகரிப்பு" கணக்கிற்கு உரிய பணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும். |

திகதி :...................................

...............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/செல்வி .......................... அவர்களை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ........…….. ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :...................................

...............................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ இலட்சினை

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : .............................................................................................
பதவி : ...........................................................................................................................................
முகவரி : ........................................................................................................................................

14. விண்ணப்பதாரர் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஊழியரராயின் திணைக்களத் தலைவரின் உறுதிமொழி: (பொருத்தமற்றவற்றை வெட்டி விடவும்)

(i) மேற்படி விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ........................................... அவர்கள் இத் திணைக்களத்தில் ........................... பதவி வகிக்கின்றார் என இதனூடாக உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) மேற்படி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், அவரை இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என இதனூடாக அறியத் தருகின்றேன்.

(iii) மேலும், இது ஒரு வெளியக ஆட்சேர்ப்பு என்றும், அவர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும் அல்லது முடிக்காமல் தற்போது வகிக்கும் பதவிக்கு எந்த வகையிலும் மாற முடியாது என்பதையும் அவருக்கு விளக்கி கூறினேன்.

திகதி :...................................

...............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் பெயர் : ................................................................................................
பதவி :.............................................................................................................................................
முகவரி : .........................................................................................................................................
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை: .....................................................................................

11-272

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

## விவசாயத் திணைக்களத்தின் பண்ணை இலிகிதர்/ விதை தொழில்நுட்பவியலாளர்/விடுதிகள் ஆண் பராமரிப்பாளர்/ விடுதிகள் பெண் பராமரிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

## Department of Agriculture

## Open Competitive Examination for Recruitment for the Post of Farm Clerk/Seed Technician /Male Warden/ Female Warden - 2025

விவசாயத் திணைக்களத்தின் பண்ணை இலிகிதர்/விதை தொழில்நுட்பவியலாளர்/ விடுதிகள் ஆண் பராமரிப்பாளர்/ விடுதிகள் பெண் பராமரிப்பாளர் ஆகிய பதவிகளின் தரம் III இல் 2024.10.30 ஆந் திகதி நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவிப் பெயர்* | *திறந்த அடிப்படையில் பூர்த்தி செய்யப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| பண்ணை இலிகிதர் | 18 |
| விதைத் தொழில்நுட்பவியலாளர் | 02 |
| விடுதிகள் ஆண் பராமரிப்பாளர் | 03 |
| விடுதிகள் பெண் பராமரிப்பாளர் | 01 |

02. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.12.12 ஆம் திகதி ஆகும். என்பதுடன் அன்றைய தினத்தில் விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

| *பதவி* | *03.1 கல்வித் தகைமைகள்* | *03.2 தொழிற் தகைமைகள்* | *மேலதிக தகைமைகள்* |
|---|---|---|---|
| பண்ணை இலிகிதர் விடுதிகள் ஆண்/ பெண் பராமரிப்பாளர் | i. க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணித பாடத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;<br>மற்றும்<br>ii. க. பொ. த. (உ/த) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு பாடத்தில் (பொது ஆங்கிலம், பொது சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல் வேண்டும். | ஏற்புடையதல்ல | உரிய துறையில் அனுபவம் |

| *பதவி* | *03.1 கல்வித் தகைமைகள்* | *03.2 தொழிற் தகைமைகள்* | *மேலதிக தகைமைகள்* |
|---|---|---|---|
| விதைத் தொழில் நுட்பவியலாளர் | i. க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணித பாடத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br><br>மற்றும்<br><br>ii. க. பொ. த. (உ/த) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களில் ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | இலங்கை விவசாயக் கல்லூரியால் வழங்கப்பட்ட இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>"ஹார்டி" தொழில்நுட்ப நிறுவனத்தில் விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br><br>"அக்குவைனாஸ்" கல்லூரியின் விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலமாக வழங்கப்படும் இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>அதற்குச் சமமான அல்லது அதனைவிடக் கூடிய சான்றிதழைப் பெற்றிருத்தல் | உரிய துறையில் உள்ள அனுபவம் |

**கவனிக்க.-** விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.2 **ஏனைய தகைமைகள்.-**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் தொடர்பில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

- இலங்கை பிரசையாக இருத்தல்.
- மிகச் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்.
- நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கு உரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரிய உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. **சம்பளம்.-**

சம்பள குறியீட்டு இலக்கம் MN-01-2025
சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 45,230 - 10 x 540 - 11 x 630 - 10 x 890 - 10 x 1,190 - ரூபா 78,360

05. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் எதிர்காலத்தில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள், அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது குறித்துரைக்கப்படும் வகையில் அங்கத்துவ பணம் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) நாட்டில், நியமிக்கப்படும் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

(iii) தற்போது அமுலிலுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறை நிபந்தனைகள் மற்றும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்கள் ஆகியவற்றுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் நிரப்பவோ அல்லது நிரப்பாமல் விடவோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

06. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அதற்கிணங்க விண்ணப்பப்படிவம் A4 (21செ. மீ. x 30 செ. மீ.) அளவிலான கடதாசியின் இரு பக்கத்திலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 05 வரை முதலாம் பக்கத்திலும் 06 முதல் 07 (அ) வரை இரண்டாம் பக்கத்திலும் 07 (ஆ) முதல் 10 வரை மூன்றாம் பக்கத்திலும் எஞ்சியவை 04 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்குரிய தகவல்கள் தனது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது அங்கு தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்களும், முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாகும். மேலும், பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க உள்ளதா என விண்ணப்பதாரி சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பப்படிவங்களை "விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம், (நிருவாகம் 01) கிளை, பழைய கலஹா வீதி, பேராதனை" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஆ) மேலே 03 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) மேற்குறிப்பிட்ட 3 ஆம் பந்தியின் அட்டவணையிலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் ஒன்றுக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பப்பத்திரம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்பதுடன் வெவ்வேறாக பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டணத்தை விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் உள்ள மக்கள் வங்கியின் பேராதனைக் கிளையில் 057-100179027204 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டின் யாதேனும் மக்கள் வங்கிக் கிளையில் பணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டில் கழன்றுவிடாதபடி ஒரு மூளையில் மாத்திரம் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை மற்றும் முத்திரை ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**கவனிக்கவும்.-**

விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அறிவித்தலின் இறுதியில் காணப் படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாக இல்லாத, பூர்த்தி செய்யப்படாத அல்லது முறையற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். திணைக்களத்தின் எவருடைய பெயருக்கும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கக் கூடாது என்பதுடன் அவ்வாறு அனுப்பி வைக்கப்படுகின்ற அல்லது நேரடியாகக் கையளிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள்

எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏதேனும் விண்ணப்பம் ஒன்று தபாலில் தொலைந்து விட்டதாகவோ அல்லது தாமதமாகி விட்டதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

07. **பரீட்சை நடைமுறை :**

(அ) முறைப்படி விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும். பரீட்சார்த்திகள் தமக்கு குறித்து ஒதுக்கப்பட்ட நிலையத்திலே பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைக் கையளித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சையில் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. சட்டத்தரணி ஒருவர், பிரபல நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், அரச அல்லது அரச சேவையில் நிரந்தர பதவிநிலைத் தரம் ஒன்றிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனு ப்பி வைக்கப்பட்டவுடன் உடனடியாக அது தொடர்பான இணையத்தள அறிவித்தல் ஒன்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விவசாயத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரமாகி 4 நாட்கள் கழித்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய விபரங்களையும் (விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி, கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட திகதி, பற்றுச்சீட்டின் பிரதி கண்டிக்கு வெளியிலான பிரதேசங்களாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் இலக்கம் ஆகியவற்றுடன்) எழுத்துமூலமான கோரிக்கை ஒன்றினையும் பேராதனை விவாசயத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் உள்ள நிருவாகக் கிளை 1 இற்கு உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். உமது எழுத்துமூல கோரிக்கைக் கடிதத்தின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது மிகவும் பயனுடையதாகும்.

(இ) இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் பிரயாணச் செலவு அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவுகளும் வழங்கப் படமாட்டாது.

(ஈ) ஆளடையாளம் : தான் தோற்றியிருக்கும் அனைத்துப் பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும் இதற்காக,

(i) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(உ) பாடவிதானம் :

| *பதவி* | *பாடம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தி அடைய வேண் டிய புள்ளி* | *பாடவிதானம்* |
|---|---|---|---|---|---|
| 1. பண்ணை இலிகிதர்<br>2. விடுதிகள் ஆண்/ பெண் பராமரிப் பாளர் | பொது அறிவு | 01 மணித்தி யாலம் | 100 | 40% | பரீட்சார்த்தியின் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், விஞ்ஞான அறிவு, விவசாய அபிவிருத்தி விளையாட்டு தொடர்பான சர்வதேச மற்றும் தேசிய தகவல்கள் தொடர்பான நடப்பு மற்றும் பண்டைய விடயங்கள் தொடர்பாகவும் மற்றும் பதவியின் தன்மைக்கேற்ப இருக்க வேண்டிய பொது அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களையும் உள்ளடக்கி இருக்கும். |

| *பதவி* | *பாடம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தி அடைய வேண்டிய புள்ளி* | *பாடவிதானம்* |
|---|---|---|---|---|---|
| | பொது உளச்சார்புப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% | கூட்டுதல், கழித்தல் உட்பட கணிதவியல் எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கம், எண் கோலங்களை இனங் காணுதல், கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்தல், எழுத்துக் கூட்டல், சரியான எழுவாய் பயனிலைத் தொடர்பைப் பொருத்தி வசனங்களை எழுதுதல், சரியாக மொழியைப் பயன்படுத்தல், உரை ஒன்றிலிருந்து கேட்கப்படும் கேள்விகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான திறனைப் பரிசீலிக்கும் வினாக்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும். |
| 3. விதைத் தொழில்நுட்ப வியலாளர் | பொது அறிவு மற்றும் பொது உளச்சார்புப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% | அபேட்சகரின் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், விஞ்ஞான அறிவு, விவசாய அபிவிருத்தி விளையாட்டு தொடர்பான சர்வதேச மற்றும் தேசிய தகவல்கள் தொடர்பான நடப்பு மற்றும் பண்டைய விடயங்கள் தொடர்பாகவும் மற்றும் பதவியின் தன்மைக்கேற்ப இருக்க வேண்டிய பொது அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களையும் உள்ளடக்கி இருக்கும். பொது உள சார்புப் பரீட்சைக்காக கூட்டுதல், கழித்தல் உட்பட கணிதவியல் எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கம், எண் கோலங்களை இனங் காணுதல், கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்தல், எழுத்துக் கூட்டல், சரியான எழுவாய் பயனிலைத் தொடர்பைப் பொருத்தி வசனங்களை எழுதுதல், சரியாக மொழியைப் பயன்படுத்தல், உரை ஒன்றிலிருந்து கேட்கப்படும் கேள்விகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான திறனைப் பரிசீலிக்கும் வினாக்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும். |

| *பதவி* | *பாடம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தி அடைய வேண்டிய புள்ளி* | *பாடவிதானம்* |
|---|---|---|---|---|---|
| | தொழில்நுட்ப வினாத்தாள் | 01 மணித்தியாலம் | 100 | 40% | 1. பொது விவசாயம் :<br>I. காலநிலை, விவசாயக் கால நிலை மற்றும் சுற்றாடல் வலயங்கள் மற்றும் அதன் தன்மைகள், பெருந்தோட்டப் பயிர்களின் பயிர்ச்செய்கை முறைகள்;<br>II. பயிர்கள் பற்றிய பொதுவான அறிவு பரிந்துரைக்கப்பட்ட இனங்கள் மற்றும் இனங்களுக்குரிய பண்புகள்;<br>III. அரச விதைக் கொள்கை;<br>IV. விதைக் கட்டமைப்புக் கூட்டிணைவு மற்றும் தரம்;<br>V. விதை உற்பத்தி கோட்பாடுகள்;<br>VI. விதை உற்பத்தி நடைமுறை மற்றும் கணக்கிடும் நிகழ்ச்சித்திட்டம்;<br>VII. விதை இறக்குமதி மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான தரமான நிருவாக முறைகள்<br>VIII. விதை அத்தாட்சிப்படுத்தல் நடைமுறைகள்;<br>IX. விதை தயாரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல்.<br><br>2. விதை தொழில்நுட்பம் (விதை வர்க்கங்களின் உறங்கு நிலை வேறுபாடுகள், விதை சுகாதாரப் பரிசோதனை, முளைத்தல் பரி சோதனை, தூய்மை பௌதீகத் தூய்மை, கையிருப்பு நிலை தொடர்பான பரீட்சிப்பு, ஈரப் பதன், பரிசோதனை கூடத்தை சுத்தப் படுத்தல், ஏனைய தன்மைகளைப் பரீட்சித்தல்) |

❖ பண்ணை இலிகிதர், விதைத் தொழில்நுட்பவியலாளர், விடுதிகள் ஆண் பராமரிப்பாளர், விடுதிகள் பெண் பராமரிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுள் திறமை அடிப்படையில் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மூன்று (03) மடங்கு எணணிக்கையிலான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் கீழ்வரும் துறைகளின் கீழ் மொத்த புள்ளிகள் 100 வழங்கப்படும்.

புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் :

1. மேலதிக கல்வித் தகைமைகள்
2. மேலதிக தொழிற் தகைமைகள்
3. உரிய துறையில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவம்
4. மொழித் தேர்ச்சி
5. நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறமை

(ஊ) **மொழி மூலம் :**

பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடாத்தப்படும் விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

(எ) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வர்கள் மாத்திரம் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து இருப்பின் 7 மேற்படி விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் இடளிக்கப் படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதல் விண்ணப்பதாரி இப்பதவிக்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளமைக்கான அங்கீகாரமாகக் கருதப்படமாட்டாது.

(ஏ) பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப் படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்பட வேண்டியேற்படும்.

(ஐ) **பரீட்சை நடாத்தப்படும் இடம்** : இப்பரீட்சை விவசாயத் திணைக்களத்தினால் கண்டி நகரிலுள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

08. **ஆட்சேர்ப்பு முறை :**

i. (அ) **பண்ணை இலிகிதர்** : பதவிக்கான எழுத்து மூலப் பரீட்சையின் திறமை ஒழுங்குமுறைக்கு அமைய திறந்த அடிப்படையிலான வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கு (03) எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ஆ) **விதை தொழில்நுட்பவியலாளர்** : பதவிக் கான எழுத்து மூலப் பரீட்சையின் திறமை ஒழுங்குமுறைக்கு அமைய திறந்த அடிப் படையிலான வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கு (03) எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(இ) **விடுதிகள் ஆண் பராமரிப்பாளர், விடுதிகள் பெண் பராமரிப்பாளர் :** பதவிக்கான எழுத்து மூலப் பரீட்சையின் திறமை ஒழுங்குமுறைக்கு அமைய திறந்த அடிப்படையிலான வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கு (03) எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலுக்கிணங்க தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பில் உறுதி செய்யப்படும் எச்சந்தர்ப்பத்திலும் விண் ணப்பதாரியின் பரீட்சார்த்தத்தன்மை அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப் பிடப்பட்ட தகைமைகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்யப்படாமல் பரீட்சையில் தோற்றி சித்தி யடைந்திருப்பினும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவருடைய விண்ணப் பப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

(iv) பிழையான மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து எவரேனும் நியமனத்தைப் பெற்ற போதிலும் அது தொடர்பில் தெரியவரும் பட்சத்தில் உடனடியாக அவருடைய நியமனம் நிராகரிக் கப்படுவதுடன் அவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

09. அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுவதற்கு கட்டுப்பட்டு உள்ளனர்.

10. இந்த அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பவற்றை விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

11. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் காணப்படுமிடத்து அது தொடர்பான தீர்மானம் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலின் மொழிகளுக்குரிய உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மைகள் காணப்படும் எனின் அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றின் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2025, ஐப்பசி மாதத்தில்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**விவசாயத் திணைக்களம்**

**விவசாயத் திணைக்களத்தின் பண்ணை இலிகிதர்/ விதை தொழில்நுட்பவியிலாளர்/விடுதிகள் ஆண் பராமரிப்பாளர்/ விடுதிகள் பெண் பராமரிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

Department of Agriculture

Department of Agriculture Open Competitive Examination for Recruitment for the Post of Farm Clerk/Seed Technician Male Warden/Female Warden - 2025

01. பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மொழி மூலம் சிங்களம் - 1
தமிழ் - 2

02. விண்ணப்பிக்கும் பதவி : ..........
(சிங்களத்தில்/ தமிழில்) ..........
(ஆங்கிலத்தில்)..........

03. பெயர் :

3.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் : ..........

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) உதா : GUNAWARDHANA, H. M. S. K.

3.2 முழுப் பெயர்: ..........
..........
(சிங்களத்தில்/ தமிழில்)

3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3.4 தொலைபேசி இலக்கம் :

04. நிரந்தர முகவரி :

4.1 ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் :
..........

4.2 சிங்களத்தில் /தமிழில் :
..........

4.3 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
..........
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

4.4 வதிவிட மாவட்டம் :
..........

4.5 பிரதேச செயலாளர் பிரிவு :
..........

05. ஆண்/பெண் பால் தன்மை :

ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினை அடைப்பினுள் எழுதவும்)

06. 6.1 பிறந்த திகதி : ஆண்டு : மாதம்: திகதி:

6.2 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : மாதங்கள்: நாட்கள்:

6.3 விவாகமானவர்/ விவாகமாகாதவர்:
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2

(உரிய இலக்கத்தினை அடைப்பினுள் எழுதவும்)

07. கல்வித் தகைமைகள் : (மொழி மூலத்துடன்) :

(அ) க. பொ. த. (சா/ தர) பரீட்சை:

(i) வருடம் மற்றும் மாதம் :....................
(ii) பரீட்சை இலக்கம் :.......................
(iii) மொழிமூலம் :......................
(iv) பரீட்சைப் பெறுபேறுகள் :

விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் 3.1 இல் தகைமைகள் ஒரே சான்றிதழில் இருத்தல் வேண்டும்.

| | *பாடங்கள்* | *சித்தி* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

(ஆ) க. பொ. த. (உ/தர) பரீட்சை:

(i) வருடம் மற்றும் மாதம் :....................
(ii) பரீட்சை இலக்கம் :.......................
(iii) மொழி மூலம் :......................
(iv) பரீட்சை பெறுபேறு:

| | *பாடங்கள்* | *சித்தி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

08. தொழிற்தகைமைகள் : (பண்ணை இலிகிதர் / விடுதிகள் ஆண் பராமரிப்பாளர்/ விடுதிகள் பெண் பராமரிப்பாளர் ஆகிய பதவிக்கு தொழிற்தகைமை ஏற்புடையதல்ல.)

| *டிப்ளோமா NVQ பாடநெறி* | *டிப்ளோமா/ NVQ சான்றிதழினை வழங்கிய நிறுவனத்தின் பெயர்* | *மொழி மூலம்* | *பரீட்சை இலக்கம்* | *டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி* | *சித்தியடைந்த ஆண்டு* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

09. நீதிமன்றம் ஒன்றுக்கு முன்னால் நீங்கள் ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டு உள்ளீரா : ஆம்/ இல்லை
ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்
.................................................................................................................................................................................
.................................................................................................................................................................................

10. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :..........................................................................................
10.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :..........................................................................................................................
10.2 பற்றுச்சீட்டு இலக்கம் :.......................................................................................................................................
10.3 தொகை :.........................................................................................................................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை இவ் கூட்டினுள் கழன்றுவிடாதவாறு ஒருபக்கத்தை மாத்திரம் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.) |

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் சரியானது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகைமையற்றவனாகக் கருதப்படுவேன் என்பதனையும் நியமனம் பெற்ற பின்னர் அது தொடர்பில் தெரியவரும் பட்சத்தில் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாது நியமனம் நிராகரிக்கப்படும் என்பதையும் நன்கு அறிவேன், மேலும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்படும் சட்டவிதிகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் என்பவற்றுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் என்னால் விண்ணப்பிக்கப்படும் ஒரு பதவிக்காக ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே முன்வைக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :................ ...............................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற ................................................................. எனும் பெயரையுடைய நபர், எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், இவர்................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி :................ ...............................,
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின்
கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :................................
பதவி :................................
முகவரி :................................
(பதவி முத்தரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)

குறிப்பு : தற்போது அரச பதவியில் இருப்பவர் இப் பதவிக்கு விண்ணப்பிப்பதாயின் தமது கையொப்பத்தை தமது நிறுவனத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் ஒருவரினூடாகவும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரி ஒருவர் தமது கையொப்பத்தினை அரச பாடசாலை அதிபர், பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், நீதிபதி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், அரச அல்லது மாகாண அரசசேவையில் நிரந்தர பதவிநிலைத் தரம் ஒன்றில் உள்ள அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

13. தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு (தேவையற்ற சொற்களை வெட்டிவிடுங்கள்)

மேலே விபரங்கள் காட்டப்பட்டுள்ள விண்ணப்பதாரர்/ விண்ணப்பதாரி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர்/ தகுதியற்றவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், அவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவரை இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி:.......................

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :................................
பதவி :................................
முகவரி :................................
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)

11-109

---

**கமத்தொழில் கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்குரிய கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய (MN 03 – 2025) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியில் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக A4 படிவத்தில் (21cm x 29cm) இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து, விண்ணப்பதாரர் தனது சொந்தக் கையெழுத்தில் நிரப்ப வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தை 2025.12.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு “கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம், இல. 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, தபாற்பெட்டி இல. 537, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" எனக் குறிப்பிடப்பட வேண்டும். அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் அந்தந்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், தாமதமாகக் கிடைக்கப் பெறும் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்ப தாரிகள் தாம் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலத்தில் விண்ணப்பத்தை பூரணப்படுத்த வேண்டும்.

1. **தொழில் விபரம்:**

   1.1 கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சிறு நீர்ப்பாசன நிர்மாணம், திருத்த வேலைகள் தொடர்பான உருவ வரைவுகள் மற்றும் செலவு மதிப்பீட்டைத் தயாரித்தல், மேற்பார்வை செய்தல், அறிக்கையிடல்.

   1.2 கமத்தொழில் வீதிகளை நிர்மாணித்தல், திருத்த வேலைகள் தொடர்பான உருவ வரைவுகள் மற்றும் செலவு மதிப்பீட்டைத் தயாரித்தல், மேற்பார்வை மற்றும் அறிக்கையிடுதல்.

   1.3 கட்டிட நிர்மாணம் திருத்த வேலைகள் தொடர்பான உருவ வரைவுகள் மற்றும் செலவு மதிப்பீட்டைத் தயாரித்தல் மேற்பார்வை மற்றும் அறிக்கையிடுதல்.

   1.4 நீர் முகாமைத்துவ வேலைத் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

   2.1. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டம் குறித்த அரசாங்கத்தின் எதிர்காலக் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். விதவைகள் அநாதைகள் / தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கான பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

2.2. தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள், தாபன விதிக்கோவையின் விதிமுறைகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான, 2310/29 ஆம் இலக்க 14.12.2022 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும் திணைக்கள கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற வேறு பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

3. **பொதுவான தகைமைகள் :**

3.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

3.2 சிறந்த நன்னடத்தை உடையவராகவும் தேக ஆரோக்கியம் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

3.3 ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடமையாற்று வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகளின் வயது 18 வயதுக் குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலு மிருக்க வேண்டும்.

3.5. ஏதேனுமொரு மதத்தில் தலைமை வகிக்கும் எந்தவொரு நபரும் இப் பரீட்சைக்குத் தோற்று வதற்குத் தகுதி பெறமாட்டார்கள்.

3.6. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. **கல்வித் தகைமைகள் :**

சிங்களம் தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரு அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

க.பொ.த (உ.த.) பரீட்சையில் விஞ்ஞான/ கணித பாடத் தின் கீழ் இரசாயன விஞ்ஞானம் பௌதிக விஞ்ஞானம் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் பாடத்தின் கீழ் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலின் பொருட்டு விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங் களில் இரண்டு பாடங்களுடன் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

5. **தொழில்சார் தகைமைகள் :**

மேற்படி 4 இல் உள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக துறைக்குரிய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளில் ஒன்றை பூரணப்படுத்தி, விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

I. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா

அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங் கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங் கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

V. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத் தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல்

அல்லது

VI. தொழிற்துறைக்குரிய தேசிய தொழிற் திறமை (NVQ) 6 ஆவது மட்டத்தின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப் பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்படி தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளை பெற்றிருத்தல்.

6. **தொழிற்துறைக்குத் தெரிவு செய்யும் முறை :**

6.1. **எழுத்துப் போட்டிப் பரீட்சைக்கான நிபந்தனைகள்:**

விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், நியமனத்தைப் பெறு வதற்கான தகைமைகளைப் பெறுவதன் பொருட்டு,

ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். அப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் தொடரொழுங்கின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையான வர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படாது என்பதுடன், தகுதிகள் தகைமைகள் பரீட்சிக் கப்படும்.

6.2. **எழுத்துப் போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

பரீட்சை பிரதானமாக இரண்டு வினாப்பத்திரங் களை உள்ளடக்கியது.

1. பொது உளச்சார்பு – காலம் - 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100
2. பொதுப் பரீட்சை – காலம் - 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100
(தொழில்நுட்பம் மற்றும் விடயம்சார் பரீட்சை)

**பாடத்திட்டம் :**

01. **பொது உளச்சார்பு :**

விண்ணப்பதாரர்களின் மொழி ஆற்றல் மற்றும் கிரகித்தல், எண்ணிக்கை ரீதியிலான ஆற்றல், தர்க்க ரீதியிலான ஆற்றல் மற்றும் பொதுவான விவேகத்தை அளவிடும் வகையில் தயாரிக்கப்படும் பல்தேர்வு மாதிரியிலான 50 வினாக்கள் அடங்கிய வினாத்தாளாகும்.

02. **பொதுப் பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடயம் சார் பரீட்சை) :**

நீர்ப்பாசன பொறியியல் விஞ்ஞானம், நில அளவையும் மட்டப்படுத்தலும் மற்றும் நில அளவைக் கோட்பாடுகள் ஆகிய பிரதான விடயங்கள் தொடர்பான பொதுவான அறிவை பரீட்சிக்கும் வகையில் தயாரிக்கப்படும் பல்தேர்வு மாதிரியிலான 50 வினாக்கள் அடங்கிய வினாத் தாளாகும்.

I. **நீர்ப்பாசன பொறியியல் :**

a. அடிப்படைப் பணிகள் :

வரைவிலக்கணமும் கோட்பாடுகளும் - நீர்ப்பாசன வகைகள் மற்றும் நீர்ப்பாசன முறைகள்.
அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

b. நீர்வளவியல் :

ஆய்வு, அடிப்படை நீர் உட்பிரவாகக் கணக்கிடல், நீர் சமநிலைச் சமன்பாடு, குளத்தின் நீர்ச் சமநிலை, வெள்ள நிலை தொடர்பான கற்கையை செயற்படுத்தும் முறை, வெள்ள நீர் தொடர்பான நீர் வரைவு.

c. பிரதான பணிகள் :

அணைக்கட்டு வகைகள், குளத்தின் கொள்ளளவைக் கணக்கிடல் மற்றும் சுதந்திர உயரம்
வெள்ள மட்டம்
குளத்தில் நீர் இழப்பு
வான் வடிவமைப்பு செய்தல் மற்றும் அணைக்கட்டு வடிவமைப்பு செய்தல்
துருசு வடிவமைப்பு

d. நீர் முகாமைத்துவம் :

வரையுருவம் மற்றும் பயிர்களின் நீர்த் தேவைப்பாட்டை நிச்சயப்படுத்தும் முறை பற்றி வரைவிலக்கணப்படுத்தல் மற்றும் பயிர்களின் நீர்த்தேவை மற்றும் நீர்ப்பாசனங்களின் நீர்த் தேவையைக் கணக்கிடல், மண்ணில் நீர் உட்பிரவாகம், நீரின் உயரம் மற்றும் நீர் விநியோக தடவைகள், நீர்ப் பாய்ச்சலை அளத்தல், வாய்க்கால்கள் நிர்மாணம் மற்றும் மெனின் ஆட்புல சமன்பாடு, நுண் நீர் வழங்கல் ஒழுங்கு முறை.

e. நீர்ப்பாசன பராமரிப்பு :

பராமரிப்பு வகைகள்
மாதிரிகளின் பராமரிப்புத் தொடர்பான கட்டளைகள்
பராமரிப்பு முறைகள்
பராமரிப்பு மதிப்பீடுகள்

II. **நில அளவை மற்றும் மட்டமாக்கல் :**

a. நில அளவை :

கோட்பாடுகள், திரிதடைய தளமட்டக் கோணமானி (டிரான்சிற் வெர்னியர் தியோடலைட்), ஒப்டிக்கல் தியோடலைட் (Optical theodolite), மின்காந்த தூரத்தை அளவிடும் கருவிகள், முக்கோணவாக்கம், ஆள்கூற்று முறை (Coordinate System), வெளிக்களப் புத்தக (field book) பராமரிப்பு மற்றும் திட்டங்களைத் தயாரித்தல்.

b. மட்டமாக்கல் :

கோட்பாடுகள், மட்டப்படுத்துவதற்கான உபகரணங்கள், டம்பி லெவல், என்ஜினீயர் லெவல் இயக்க மட்டம்,

மட்டப்படுத்தலினால் ஏற்படும் பயன்கள். குளப்படுக்கையை அளத்தல், நீள மற்றும் குறுக்கு வாய்க்கால்களை அடையாளமிடல், குறியிட்ட இடத்தை அளத்தல், நிர்மாண மட்டங்கள், மாறுபட்ட மட்டங்களை அளத்தல்.

III. **அளவியல் :**

a. இலங்கை தரத்திற்கேற்ப மத்திய ரேகை முறையில் அளவை எடுத்தல்,
b. நிலப்பரப்புக் கணக்கீடு
c. வரைபட மானியும் அளவு கோல்களின் உபயோகமும்
d. சிம்சன் விதியின் படி ஆட்கூறு முறைக்கமைய நிலப்பரப்புக் கணக்கீடு
e. தொகுதி கணக்கீடு
f. பிரிஸ்மோடியல் சட்டம்
g. மண் வேலைக் கணக்கீடு
h. கணக்கீடு
i. "மாஸ் ஹோல்" வரைபுகள்
j. குறுக்கு முக வெட்டுகளும் நிரப்புதலுமான முறை, சம உயரக் கோட்டு வரைபடங்கள் மூலம் கொள்ளளவைக் கணக்கிடல்

6.3. **பரீட்சைக்கான மொழி மூலம்:**

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை சமர்ப்பித்த மொழி மூலத்திலேயே அனைத்து வினாத்தாள் களுக்கும் பதிலளிக்க வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு:**

மேலே உள்ள 4 மற்றும் 5 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளைப் பெற்ற தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

8. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) :**

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை I இன் படி, MN3 - 2025 சம்பள அளவுத் திட்டத்திற்கமைவாக ரூ. 52,250 - 10×800 - 11×1,190 - 10 × 1,320 - 10×1,350 - ரூபா 100,040 (10/2025 இற்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

9. **தரங்களுக்கு பதவி உயர்த்துதல் :**

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவையின் பொருட்டான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவானது.

10. **பரீட்சைக் கட்டணம் :**

விண்ணப்பதாரர்களால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய ரூ.1000.00 பணத்தை எந்தவொரு கமநல சேவை நிலையத்திலும் செலுத்த முடியும் என்பதுடன், கமநல சேவை நிலையத்தினால் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக க.சே.நி./2 (அ) பற்றுச்சீட்டு வழங்கப்படும். அப் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட வேண்டும். எதிர்காலப் பயன்பாட்டிற்காக பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பொருத்தமானது. எக் காரணத்திற்காகவும் அப் பணம் திரும்பி வழங்கப்படமாட்டாது.

11. **அரசகரும மொழிக் கொள்கையை செயற்படுத்துதல் :**

பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பதவியில் இணைந்து 03 வருடங்களுக்குள் குறித்த அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர் அல்லது சமாதான நீதவானொருவரினால் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளரொருவரால் அல்லது சட்டத்தரணியொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரால் அல்லது பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பட்டியலிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர, பதவிநிலைத் தரத்தின் பதவியை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

13. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும் இவ் அறிவித்தலிலுள்ள மொழி மூலங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடற்ற தன்மை அல்லது தெளிவின்மை காணப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைவாக தீர்மானம் மேற்கொள்ளப்படும்

தம்மிக ரணதுங்க,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தி திணைக்களம்,
தபால் பெட்டி 537,
கொழும்பு 07,
2025, நவெம்பர் 06.

☐

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலம்

சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E ☐

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதுக)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..........................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் : SILVA A. B.
(ii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்): ..........................................................
..........................................................

2. (i) நிரந்தர முகவரி : ..........................................................
..........................................................
(ii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................................
..........................................................
(iii) விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம்; :..........................................................
(iv) பிரதேச செயலாளர் பிரிவு :..........................................................

3. பாலினம்:

ஆண் 0
பெண் 1 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. (i) பிறந்த திகதி:
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. குடியியல் நிலை :
திருமணமாகாதவர் 1
திருமணமானவர் 2 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

8. க.பொ.த. (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவுடன் பிரதிகளை இணைக்கவும்.)
   (i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம் :.............................................................................
   (ii) விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண் :...............................................................................

| பாடம் | தேர்ச்சி | பாடம் | தேர்ச்சி |
|---|---|---|---|
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |

9. க.பொ.த.(உ./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவுடன் பிரதிகளை இணைக்கவும்.)

   (i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம் :.............................................................................
   (ii) விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண் :...............................................................................

| பாடம் | தேர்ச்சி |
|---|---|
| ........................................................ | ................. |
| ........................................................ | ................. |
| ........................................................ | ................. |
| ........................................................ | ................. |

10. வேறு தகைமைகள்: தொழில்நுட்பம் /தொழில்முறை (பிரதிகளை இணைக்கவும்.)

| *நிறுவனம்* | *பாடநெறி* | *காலம்* | *தேர்ச்சி* |
|---|---|---|---|
| | | | |

11. உரிய துறை தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் :
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

12. (I) கமநல சேவை நிலையத்திற்கு பணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி
   : .......................................................................................................................................................................

   (II) கமநல சேவை நிலையம்:............................................... மாவட்டம்:.................................................

| |
|---|
| பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இக் கூட்டினுள் கழறாதவாறு ஒட்ட வேண்டும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது எதிர்கால விசாரணைகளின் போது பயனுள்ளதாக அமையும்) |

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

என்னால் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு தகவல் தவறானது அல்லது உண்மைக்குப் புறம்பானது என தேர்வுக்கு முன்னர் கண்டறியப்பட்டால், நான் தகுதியற்றவராவதற்கும் தேர்வு செய்து நியமிக்கப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால், எவ்வித இழப்பீடுமின்றி நான் பதவி நீக்கம் செய்யப்படலாம் எனவும் அறிவேன்.

திகதி : ……………………… ……………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இங்கு கையொப்பமிட்டுள்ள …………………………………………………………… இனை வதிவிடமாகக் கொண்ட திரு./திருமதி/செல்வி ………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பம் ………………………… ஆம் திகதி என் முன்னிலையில் இடப்பட்டது எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

……………………………………..
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் : ………………………………
பதவி : ………………………………
முகவரி : ………………………………
திகதி : ………………………………

15. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக மட்டும்

இவ் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ………………………………………………… தற்போது இவ் அமைச்சில் /திணைக்களத்தில் ………………………………………………… ஆக நிரந்தர/தற்காலிக/ அமைய ஊழியராக கடமையாற்றுகின்றார் எனவும் அவர் இப் பதவியின் பொருட்டு தேர்வு செய்யப்படுவாராயின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் அறிவிக்கிறேன்.

……………………………………………
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

11-178/1

---

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சு**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்குரிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதியின் (MN 03- 2025) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) பதவியின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பத்தாரர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 அளவிலான கடதாசியின் (21 cm x 29 cm) இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரியினால் தனது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் 2025.12.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு கமநல அபி விருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 42, சேர் மார்க்கஸ் பெர்னான்டோ மாவத்தை, த.பெ.537, கொழும்பு 07. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பபடிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்தல் - 2025” என குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பத்தாரர்களின் விண்ணப்பப்படிவம் அவர்களது திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தாரர் பரீட்சைக்கு தோன்ற எண்ணியுள்ள மொழிமூலத்தில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த வேண்டும்.

1. **தொழில் விபரம் :**

1.1. இயந்திரவியல் அலகிற்குரிய இயந்திர உபகர ணங்கள் /வாகனங்கள் தொடர்பாகப் பொறுப்பாக விருத்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக பரீசீலித்துப் பார்த்தல்.

1.2. இயந்திரங்கள் / வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் உரிய முறையில் பராமரித்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதற் குரிய கடித ஆவணங்களைப் பேணுதல்.

1.3. ஒவ்வொரு வேலைகள் மற்றும் வேலைத் தளங்களுக்கு பொருத்தமான இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைத் தெரிவு செய்து கொடுத்தல்.

1.4. இயந்திரவியல் அலகின் இயந்திரவியல் ஆளணிப் பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அலுவலக ஆளணியினரைப் பயிற்றுவித்தல் மற்றும் அறிவுரை களை வழங்குதல்.

2. **சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நிபந்த னைகள் :**

2.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். விதவைகள் அநாதைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்குப் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

2.2 தெரிவு செய்யப்படும் விண்ணப்பத்தாரர்கள் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் நிதிப் பிரமாணத்திற்கும் அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான 2310/29 ஆம் இலக்க 2022.12.24 ஆம் திகதிய அதிவிஷேட வர்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பொது சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடைமுறை விதிகளுக்கும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கும் காலத்திற்கு காலம் அரசினால் வெளியிடப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் பணிந்து ஒழுகுதல் வேண்டும்.

3. **பொதுவான தகைமைகள் :**

3.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

3.2 சிறந்த நடத்தையும் நல்ல தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

3.3 ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருக்க வேண்டும்.

3.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.5 ஏதேனும் சமயப் பணியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகைமையற்றவராவார்.

3.6 சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகுதிகள், விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப் பட்டிருக்க வேண்டும்.

4. **கல்வித் தகைமைகள் :**

சிங்களம் / தமிழ் ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்வி பொது தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் விஞ்ஞான / கணித பாடத்தின் கீழ் இரசாயன விஞ்ஞானம்,பௌதீக விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் அல்லது தொழில்நுட்பவியல் பாடத்தின் கீழ் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலின் பொருட்டு விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங் களுடன் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி யடைந்திருத்தல்.

5. **தொழில்சார் தகைமைகள் :**

மேற்படி 4 இல் உள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக துறைக்குரிய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளில் ஒன்றை பூரணப்படுத்தி, விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

I. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி யினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இயந்திரவியல்)

அல்லது

II. தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (இயந்திரவியல்)

அல்லது

III. கல்வி அல்லது உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (இயந்திரவியல்)

அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படும் தொழில்நுட்ப டிப்ளோமா (இயந்திரவியல்)

அல்லது

V. இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல்

அல்லது

VI. தொழிற்துறைக்குரிய தேசிய தொழிற் திறமை (NVQ) 6வது மட்டத்தின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கேட்டறிந்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்.

6. **தொழிற்துறைக்குத் தெரிவு செய்யும் முறை :**

6.1. எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் நிபந் தனைகள் :

விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் நியமனம் பெறுவதற்கு தகைமைகளைப் பெற்றுக் கொள்வ தற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். இப் பரீட்சையில் இரண்டு பாடங்களின் பொருட்டும் பெற்றுக் கொண்ட மொத்தப்புள்ளிகளின் திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையானவர்கள் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், தகைமைகள் மட்டும் பரீட்சிக்கப்படும்.

6.2. எழுத்து மூல போட்டிப் பரீட்சைக்குரிய பாட விதானம் :

பரீட்சை பிரதானமான 2 வினாப் பத்திரங்களை கொண்டது.

1. உளச்சார்பு பரீட்சை - காலம் 1 மணித்தியாலம் - மொத்தப்புள்ளி 100
2. பொதுப் பரீட்சை - காலம் 1 மணித்தியாலம் - மொத்தப்புள்ளி 100

(தொழில்நுட்பம் மற்றும் விடயத்துடன் இணைந்த பரீட்சை)

**பாட விதானம்**

01. உளச்சார்பு பரீட்சை

பரீட்சார்த்திகளின் மொழி ஆற்றல் மற்றும் புரிந்துணர்வு, எண் ரீதியான திறன், தர்க்கரீதியான ஆற்றல்கள், பொதுவான புத்திக்கூர்மை என்பவற்றை அளவிடத்தக்கவாறு தயாரிக்கப்படும் பல்தேர்வு வினாக்களைக் கொண்ட மாதிரியிலான குறுகிய விடைகளை அளிக்கும் மாதிரியிலான குறிக்கோளுடான 50 வினாக்களைக் கொண்டுள்ள வினாப் பத்திரமாகும்.

02. பொதுப் பரீட்சை :

1. மோட்டார் இயக்கவியல்

I. உராய்வு நீக்கலின் முக்கியத்துவம், உராய்வு முறைகள் மற்றும் அவற்றின் பிழைகளை தீர்மானித்தல.;

II. உராய்வு நீக்கல் வகைகள் மற்றும் அவற்றை இடும் பொருட்டு பயன்படுத்தும் உபகரணங்கள், டயர் ரியூப்களை இனங்காணல்.

III. டயர் ரியூப்களின் சேர்விஸ் செய்தல்.

IV. மோட்டார் வாகனங்களின் என்ஜின் பாகங்கள், க்ளட்ச் அமைப்பு, சக்தி பரிமாற்ற அமைப்பு மற்றும் வாகனத்தின் பல்வேறு பாகங்களின் செயற்பாடுகள் பிழைகளைத் தீர்மானித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

V. வாகன உடல் பாகங்களின் உலோக வேலைப்பாடுகள் மற்றும் வர்ணம் பூசுதல்.

2. நிர்மாண இயந்திர உபகரணங்களில்,

I. ஹைட்ராலிக் அமைப்புக்களைப் பேணுதல், பராமரித்தல் மற்றும் திருத்தங்கள்

II. மின்சாரம் / இலக்ரோனிக் / கணினி அமைப் புக்களைப் பேணுதல், பராமரித்தல் மற்றும் திருத்தங்கள்

III. இயந்திரங்களின் அன்டர்கேரேஜ் மற்றும் இயக்கப் பாகங்களின் நிலையைப் பேணுதல், பராமரித்தல் மற்றும் திருத் தங்கள்

3. இயந்திரக் கூடங்கள்

I. இயந்திரவியல் அலகுகளில் உள்ள பல்வேறு வகையான இயந்திரங்களை இனங்காணல்

II. இயந்திரவியல் அலகுகளில் உள்ள பல்வேறு வகையான இயந்திரங்களில் சரியான செயற்பாடுகள் மற்றும் திருத் தங்கள்.

4. பொருட்களின் பண்புகள் மற்றும் எளிதான கணக்கிடல்

I. பல்வேறு விதமான பொருட்களை இனங்காணல்.

II. பொருட்கள் மீது விசைகளை செயற் படுத்தும் போது நடத்தை, கனவளவு, வலு, வலுசக்தி, வேலை, வினைத்திறன் போன்ற எளிதான கணக்கிடல்.

5. பாதுகாப்பு முறைகள்

I. இயந்திரவியல் அலகுகளில் / இயந்திர உபகரணங்களில் இருக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள்

6. கற்பிக்கும் முறைகள்

மேலே குறிப்பிட்டுள்ள இயந்திரவியல் அலகின் இயந்திரங்களின் சரியான பாவனை, பிழைகளைகளைத் தீர்மானித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் பிரயோக வகுப்புக்களை நடாத்தும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய கற்பிக்கும் முறைகள் மற்றும் கற்பிக்கும் உபகரணங்களைத் தயாரித்தல் நவீன கற்பிக்கும் உபகரணங்கள் தொடர்பான புரிதல்.

6.3. பரீட்சையின் மொழிமூலம்

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப் பதாரர் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்த மொழியிலேயே பரீட்சையில் தோன்றும் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு :**

மேற்குறிப்பிட்ட 4 மற்றும் 5 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) III ஆம் தரத்துக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

8. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) :**

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் உப அட்டவணை 1 இன் கீழ் MT 3 - 2025 சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைய ரூ. 52,250 - 10 × 800 - 11× 1190 - 10 × 1320 - 10 × 1350 - ரூபா 100,040 (10/2025 இற்கு அமைய செலுத்தப்படும்.)

9. **தரங்களுக்கு பதவி உயர்த்துதல் :**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் பொருட்டான ஆட்சேர்ப்பு நடைமுறை விதிக்கு ஏற்புடையதாகும்.

10. **பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரரினால் பரீட்சைக் கட்டணமாக செலுத்த வேண்டிய ரூ.1000.00 பணத்தை எந்தவொரு கமநல சேவைகள் நிலையத்திலும் செலுத்தலாம் என்பதுடன், கமநல சேவைகள் நிலையத்தினால் பணம் பெற்றுக்கொண்டதற்கான க.சே.நி/2(அ) பற்றுச்சீட்டு விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். அப்பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பின்னரான தேவையின் பொருட்டு பற்றுச்சீட்டின் நிழற்பிரதி யொன்றை வைத்திருப்பது பொருத்தமானது ஆகும். எக்காரணம் கொண்டும் இப்பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

11. **அரசகரும மொழிக் கொள்கைகளை அமுல்படுத்தல் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இற்கு ஏற்ப மற்றும் அதற்கு இணையான சுற்றுநிருபங்களுக்கு அமைய பதவிக்கு சேர்த்து கொள்ளப்பட்டு 03 வருட காலத்தினுள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றில் அதிபரொருவர் அல்லது சமாதான நீதவானொரு வரினால் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாள ரொருவரினால் அல்லது சட்டத்தரணியொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலரொருவரினால் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பட்டியிலிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலைத் தரத்தின் பதவியை வகிக்கும் அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் வெளியிடப்படும் இவ் அறிவித்தலிலுள்ள மொழி மூலங்களுக்கு இடையே ஏதேனும் பொருத்தப்பாடற்ற தன்மை அல்லது தெளிவின்மை காணப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைய தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

தம்மிக ரணதுங்க,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தி திணைக்களம்,
தபால் பெட்டி இல. 537,
கொழும்பு 07,
2025, நவெம்பர் 06.

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்) தரம் III இக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழிமூலம்

சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதுக)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..........................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் : SILVA A. B.

(ii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்): ..........................................
..........................................

2. (i) நிரந்தர முகவரி : ..........................................
..........................................

(ii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................
..........................................

(iii) விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம்; :..........................................

(iv) பிரதேச செயலாளர் பிரிவு :..........................................

3. பால் :

ஆண் 0
பெண் 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

5. (i) பிறந்த திகதி:

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

6. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :
விவாகமானவர் 1
விவாகமாகாதவர் 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

8. க.பொ.த. (சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவுடன் பிரதிகளை இணைக்கவும்.)
   (i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம் :...........................................................................
   (ii) விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண் :...............................................................................

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| ........................................................ | ................ | ................................................ | ................ |
| ........................................................ | ................ | ................................................ | ................ |
| ........................................................ | ................ | ................................................ | ................ |
| ........................................................ | ................ | ................................................ | ................ |
| ........................................................ | ................ | ................................................ | ................ |

9. க.பொ.த.(உ./த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்.)

   (i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம் :...........................................................................
   (ii) விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண் :...............................................................................

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| ........................................................ | ................ |
| ........................................................ | ................ |
| ........................................................ | ................ |
| ........................................................ | ................ |

10. ஏனைய தகைமைகள்: தொழில்நுட்ப /தொழில் சார் (பிரதிகளை இணைக்கவும்.)

| *நிறுவனம்* | *பின்பற்றப்பட்ட பாடநெறி* | *காலம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |

11. குறித்த துறை தொடர்பாக பெற்றுக்கொண்டுள்ள அனுபவங்கள் :
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

12. (I) கமநல சேவை நிலையத்திற்கு பணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி
: ..........................................................................................................................................................................

(II) கமநல சேவை நிலையம்:............................................... மாவட்டம்:.................................................

| |
|---|
| பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இக் கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்) |

13. விண்ணப்பதாரியின் கூற்று :

என்னால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல் தவறானது உண்மையற்றதும் எனத் தெரிவுக்கு முன்னர் தெரியவருமாயின், நான் தகுதியற்றவன் என செயற்படுத்துவதற்கும் நியமனத்தின் பின்னர் தெரிய வருமாயின் எவ்விதமான நஷ்ட ஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

திகதி : ……………………… ……………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இங்கு கையொப்பம் இடப்பட்டுள்ள ...................................................................... என்னும் முகவரியில் வதியும் திரு./திருமதி/செல்வி ............................................................ என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பத்தை .............................. ஆம் திகதி எனது முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

...........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின்
பெயர் : ....................................
பதவி : ....................................
முகவரி : ....................................
திகதி : ....................................

15. தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் பொருட்டு மட்டும்.

இவ் விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ......................................................... என்பவர் தற்போது இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் ................................................................ ஆக நிரந்தர / தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும் அவர் இப் பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுவாராயின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் அறியத்தருகின்றேன்.

....................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

11-178/2

---

**கமத்தொழில் கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு - 03 சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்குரிய கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரிவு - 03 சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக A4 படிவத்தில் (21cm x 29cm) இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து, விண்ணப்பதாரர் தனது சொந்தக் கையெழுத்தில் நிரப்ப வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை 2025.12.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம், இல. 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, தபாற்பெட்டி இல. 537, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" எனக் குறிப்பிடப்பட வேண்டும். அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் அந்தந்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தல் வேண்டும்.

1. **தொழில் விபரம்:**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள சகல சிறிய நீர்ப்பாசனங்களின் புணரமைப்பு, நீர் முகாமைத்துவம் மற்றும் தரிசான வயற்காணிகளைப் பயிரிடலின் கீழ் புதிய நிர்மாணங்கள், மேம்படுத்தல் மற்றும் திருத்த வேலைகளின் பொருட்டான

வேலைகளைப் பரிசோதிப்பதற்கும் மற்றும் நிர்மாணங்களுக்கும் உரிய உருவ வரைவுகளைத் தயாரித்தல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு உதவுதல்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

2.1. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டம் குறித்த அரசாங்கத்தின் எதிர்காலக் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கான பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

2.2. தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள், தாபன விதிக்கோவையின் விதிமுறைகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான, 2310/29 ஆம் இலக்க 14.12.2022 ஆம் திகதிய அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் திணைக்கள கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற வேறு பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கி யொழுகுதல் வேண்டும்.

3. **பொதுவான தகைமைகள் :**

3.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

3.2 சிறந்த நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக் கியம் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

3.3 ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடமையாற்று வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகளின் வயது 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலுமிருக்க வேண்டும்.

3.5. ஏதேனுமொரு மதத்தில் தலைமையை வகிக்கும் எந்தவொரு நபரும் இப் பரீட்சைக்குத் தோற்று வதற்குத் தகுதி பெறமாட்டார்கள்.

3.6. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. **கல்வித் தகைமைகள்:**

சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

தொழில்சார் துறைக்கு ஏற்புடையதான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தேசிய தொழிற்சார் திறமை (NVQ -03) மூன்றாவது மட்டத்திற்கு உட்படும் தொழில்நுட்ப பாடநெறியொன்றை வெற்றிகரமாக பின்பற்றி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5. **தொழிற் தகைமைகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழிற்திறமை ஐந்தாம் (NVQ - 05) மட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப (சிவில் பொறியியல்) சான்றிதழைப் பெற்றிருத்தல்.

6. **உடல் தகைமைகள்:**

எல்லா விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் தனது கடமைகளை திறம்படச் செய்வதன் பொருட்டு உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

7. **தொழிற்துறைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான அடிப்படை:**

7.1. **எழுத்துப் போட்டிப் பரீட்சைக்கான நிபந்தனைகள்:**

விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், நியமனத்தைப் பெறு வதற்கான தகைமைகளைப் பெறுவதன் பொருட்டு, ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். அப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் தொடரொழுங்கின் அடிப் படையில் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட் சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படாது என்பதுடன், தகுதிகள் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

7.2. **எழுத்துப் போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

பரீட்சை பிரதானமாக இரண்டு வினாப்பத்திரங் களை உள்ளடக்கியது.

1. பொது உளச்சார்பு – காலம் - 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100
2. பொதுப் பரீட்சை – காலம் - 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100
   (தொழில்நுட்பம் மற்றும் விடயம்சார் பரீட்சை)

பாடத்திட்டம்

01. பொது உளச்சார்பு

விண்ணப்பதாரர்களின் மொழி ஆற்றல் மற்றும் கிரகித்தல், எண்ணிக்கை ரீதியிலான ஆற்றல், தர்க்க ரீதியிலான ஆற்றல் மற்றும் பொதுவான விவேகத்தை அளவிடும் வகையில் தயாரிக்கப் படும் பல்தேர்வு மாதிரியிலான 50 வினாக்கள் அடங்கிய வினாத்தாளாகும்.

02. பொதுப்பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடயம்சார் பரீட்சை)

நீர்ப்பாசன பொறியியல் விஞ்ஞானம், நில அளவையும் மட்டப்படுத்தலும் மற்றும் நில அளவைக் கோட்பாடுகள் ஆகிய பிரதான விடயங்கள் தொடர்பான பொதுவான அறிவை பரீட்சிக்கும் வகையில் தயாரிக்கப்படும் பல்தேர்வு மாதிரியிலான 50 வினாக்கள் அடங்கிய வினாத்தாளாகும்.

I. நீர்ப்பாசன பொறியியல்

a. அடிப்படைப் பணிகள்
வரைவிலக்கணமும்
கோட்பாடுகளும் - நீர்ப்பாசன
வகைகள் மற்றும் நீர்ப்பாசன
முறைகள்.
அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

b. நீர்வளவியல்
ஆய்வு,அடிப்படை நீர்
உட்பிரவாகக் கணக்கிடல், நீர்
சமநிலைச் சமன்பாடு, குளத்தின்
நீர்ச் சமநிலை, வெள்ள நிலை
தொடர்பான கற்கையை
செயற்படுத்தும் முறை, வெள்ள நீர்
தொடர்பான நீர் வரைவு.

c. பிரதான பணிகள்
அணைக்கட்டு வகைகள், குளத்தின்
கொள்ளளவைக் கணக்கிடல்
மற்றும் சுதந்திர உயரம்
வெள்ள மட்டம்
குளத்தில் நீர் இழப்பு
வான் வடிவமைப்பு செய்தல்
மற்றும் அணைக்கட்டு வடிவமைப்பு
செய்தல்
துருசு வடிவமைப்பு

d. நீர் முகாமைத்துவம்
வரையுருவம் மற்றும் பயிர்களின்
நீர்த் தேவைப்பாட்டை
நிச்சயப்படுத்தும் முறை பற்றி
வரைவிலக்கணப்படுத்தல்
மற்றும் பயிர்களின் நீர்த்தேவை
மற்றும் நீர்ப்பாசனங்களின்
நீர்த் தேவையைக் கணக்கிடல்,
மண்ணில் நீர் உட்பிரவாகம், நீரின்
உயரம் மற்றும் நீர் விநியோக
தடவைகள், நீர்ப் பாய்ச்சலை
அளத்தல், வாய்க்கால்கள்
நிர்மாணம் மற்றும் மெனின் ஆட்புல
சமன்பாடு, நுண் நீர் வழங்கல்
ஒழுங்கு முறை.

e. நீர்ப்பாசன பராமரிப்பு
பராமரிப்பு வகைகள்
மாதிரிகளின் பராமரிப்புத்
தொடர்பான கட்டளைகள்
பராமரிப்பு முறைகள்
பராமரிப்பு மதிப்பீடுகள்

II. நிலஅளவை மற்றும் மட்டமாக்கல்

a. நிலஅளவை

கோட்பாடுகள், திரிதடைய தள மட்டக் கோணமானி (டிரான்சிற் வெர்னியர் தியோடலைட்), ஒப்டிக்கல் தியோடலைட் (Optical theodolite), மின்காந்த தூரத்தை அளவிடும் கருவிகள், முக்கோண வாக்கம், ஆள்கூற்று முறை (Coordinate System), வெளிக்களப் புத்தக (field book) பராமரிப்பு மற்றும் திட்டங்களைத் தயாரித்தல்.

b. மட்டமாக்கல்

கோட்பாடுகள், மட்டப்படுத்துவ தற்கான உபகரணங்கள், டம்பி லெவல், என்ஜினீயர் லெவல் இயக்க மட்டம், மட்டுப்படுத்தலி னால் ஏற்படும் பயன்கள். குளப் படுக்கையை அளத்தல், நீள மற்றும் குறுக்கு வாய்க்கால்களை அடை யாளமிடல், குறியிட்ட இடத்தை அளத்தல், நிர்மாண மட்டங்கள், மாறுபட்ட மட்டங்களை அளத்தல்.

III. அளவியல்

a. இலங்கை தரத்திற்கேற்ப மத்திய ரேகை முறையில் அளவை எடுத்தல்,
b. நிலப்பரப்புக் கணக்கீடு
c. வரைபட மானியும் அளவு கோல்களின் உபயோகமும்
d. சிம்சன் விதியின் படி ஆட்கூறு முறைக் கமைய நிலப்பரப்புக் கணக்கீடு
e. தொகுதி கணக்கீடு
f. பிரிஸ்மோடியல் சட்டம்
g. மண் வேலைக் கணக்கீடு
h. கணக்கீடு
i. "மாஸ் ஹோல்" வரைபுகள்

j. குறுக்கு முக வெட்டுகளும் நிரப்புதலுமான முறை,

k. சம உயரக் கோட்டு வரைபடங்கள் மூலம் கொள்ளளவைக் கணக்கிடல்

7.3. **பரீட்சைக்கான மொழி மூலம்:**

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்ப தாரர் விண்ணப்பத்தை சமர்ப்பித்த மொழி மூலத் திலேயே அனைத்து வினாத்தாள்களுக்கும் பதி லளிக்க வேண்டும்.

8. **ஆட்சேர்ப்பு:**

மேலே உள்ள 4 மற்றும் 5 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளைப் பெற்ற, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

9. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்):**

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை I இன் படி, MT 1- 2025 சம்பள அளவுத் திட்டத்திற்கமைவாக ரூபா 50,090 - 10 × 540 - 11 × 630 - 10 × 1010 - 10 × 1190 - ரூபா 84420 (10/2025 இற்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

10. **தரங்களுக்கு பதவி உயர்த்துதல் :**

கமநல அபிவிருத்தி திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு - 03 சேவைப் பிரிவில் தொழில்நுட்ப உதவியாளர் பதவியின் பொருட்டான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவானது.

11. **பரீட்சைக் கட்டணம் :**

விண்ணப்பதாரர்களால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய ரூபா 1000.00 பணத்தை எந்தவொரு கமநல சேவை நிலையத்திலும் செலுத்த முடியும் என்பதுடன், கமநல சேவை நிலையத்தினால் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக க.சே.நி./2 (அ) பற்றுச்சீட்டு வழங்கப்படும். அப்பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட வேண்டும். எதிர்காலப் பயன்பாட்டிற்காக பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பொருத்தமானது. எக் காரணத்துக்காகவும் அப் பணம் திரும்பி வழங்கப்படமாட்டாது.

12. **அரசாங்க மொழிக் கொள்கையை செயற்படுத்துதல் :**

பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பதவியில் இணைந்து 03 வருடங்களுக்குள் குறித்த அரசாங்கமொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர் அல்லது சமாதான நீதவானொருவரினால் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளரொருவரால் அல்லது சட்டத் தரணியொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரால் அல்லது பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பட்டியலிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர, பதவிநிலைத் தரத்தின் பதவியை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

14. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும் இவ் அறிவித்தலிலுள்ள மொழி மூலங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடற்ற தன்மை அல்லது தெளிவின்மை காணப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைவாக தீர்மானம் மேற்கொள்ளப்படும்

தம்மிக ரணதுங்க,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தி திணைக்களம்,
தபால் பெட்டி 537,
கொழும்பு 07,
2025, நவெம்பர் 06.

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் வகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலம்

சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E

(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதுக)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..........................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் : SILVA A. B.

(ii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்): ..........................................................
..........................................................

2. (i) நிரந்தர முகவரி : ..........................................................
..........................................................

(ii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................................
..........................................................

(iii) விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம்; :..........................................................

(iv) பிரதேச செயலாளர் பிரிவு :..........................................................

3. பாலினம்:

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. (i) பிறந்த திகதி:

ஆண்டு : மாதம் : திகதி :

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

6. தொலைபேசி இலக்கம் :

7. குடியியல் நிலை :
திருமணமாகாதவர் 1
திருமணமானவர் 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

8. க.பொ.த. (சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவுடன் பிரதிகளை இணைக்கவும்.)
   (i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம் :............................................................................
   (ii) விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண் :................................................................................

| பாடங்கள் | தேர்ச்சி | பாடங்கள் | தேர்ச்சி |
|---|---|---|---|
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |
| ........................................................ | ................. | ............................................... | ................. |

9. க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்.)

   (i) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் மாதம் :............................................................................
   (ii) விண்ணப்பதாரரின் பரீட்சை சுட்டெண் :................................................................................

| பாடங்கள் | தேர்ச்சி |
|---|---|
| ........................................................ | ................. |
| ........................................................ | ................. |
| ........................................................ | ................. |
| ........................................................ | ................. |

10. ஏனைய தகைமைகள்: தொழில்நுட்ப /தொழில் சார் (பிரதிகளை இணைக்கவும்.)

| *நிறுவனம்* | *பாடநெறி* | *காலம்* | *சித்தி* |
|---|---|---|---|
| | | | |

11. உரிய துறை தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவங்கள் :
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................
.........................................................................................................................................................................

12. (I) கமநல சேவை நிலையத்திற்கு பணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி
   : ......................................................................................................................................................................

   (II) கமநல சேவை நிலையம்:............................................... மாவட்டம்:.................................................

| |
|---|
| பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இக் கூட்டினுள் கழறாதவாறு ஒட்ட வேண்டும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது எதிர்கால விசாரணைகளின் போது பயனுள்ளதாக அமையும்) |

13. விண்ணப்பதாரியின் கூற்று :

என்னால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல் தவறானதும் உண்மையற்றதும் எனத் தெரிவுக்கு முன்னர் தெரியவருமாயின், நான் தகுதியற்றவன் என செயற்படுத்துவதற்கும் நியமனத்தின் பின்னர் தெரிய வருமாயின் எவ்விதமான நஷ்ட ஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

திகதி : ………………………

……………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இங்கு கையொப்பம் இடப்பட்டுள்ள ………………………………………………………… என்னும் முகவரியில் வதியும் திரு./திருமதி/செல்வி …………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பத்தை ………………………… ஆம் திகதி எனது முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

……………………………………..
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின்
பெயர் : ………………………………
பதவி : ………………………………
முகவரி : ………………………………
திகதி : ………………………………

15. தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.

இவ் விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ........................................................ என்பவர் தற்போது இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் ............................................................... ஆக நிரந்தர / தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும் அவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவாராயின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் அறியத் தருகின்றேன்.

……………………………………………
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

திகதி : ………………………………

11-178/3

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பதிவாளர் சேவையின் II ஆம் வகுப்பு காணிப் பதிவாளர்/ உரித்துப் பதிவாளர் / மாவட்ட பதிவாளர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பதிவாளர் சேவையின் II ஆம் வகுப்பு காணிப்பதிவாளர்/ உரித்துப் பதிவாளர் / மாவட்டப் பதிவாளர் பதவிகள் 25 இற்கு நியமனம் செய்வதற்காக, பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பு I ஆம் தரம் அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் இப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நடாத்தப்படுமென இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையதளத்தில் உள்ள "Our Services" பிரிவின் கீழ் "Online Applications – Recruitment Exams / E.B. Exams" என்ற இணைப்பின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளதுடன். விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல் 2025, நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் ஆரம்பமாகி, 2025, திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு நிறைவடையும்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி வரை தாமதப் படுத்துவதால் ஏற்படக்கூடிய எந்தவொரு அசௌகரி யத்தையும் விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அலுவலர்கள், விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தமது தனிப் பட்ட கோப்பில் சேர்த்துக்கொள்ளும் வகையில், தங்களது நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில், நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்திய விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

01. **சேவையில் ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறை :**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்ற பரீட்சார்த்திகளில் இருந்து அதிக மதிப்பெண் வரிசை அடிப்படையில் பரீட்சாரத்திகள் 30 பேர்கள் (வெற்றிடங்களுக்கு மேலதிகமாக 20%) சாதாரண நேர்முகத் தேர்விற்காக (மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது) அழைக்கப்படுவார்கள். இந் நேர்முகத் தேர்வில், விண்ணப்பதாரர்களின் அடிப்படை தகுதிகள் பரீட்சித்தலானது அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகத் தேர்வு குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன். நேர்முகத் தேர்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தேவையான அனைத்து அடிப்படைத் தகுதிகளையும் பூர்த்தி செய்யும் அளவிற்கு, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணையான விண்ணப்பதாரர்கள், மேலே குறிப்பிடப்பட்ட தேர்வு முடிவுகளின் அடிப்படையில், திறன் வரிசைப்படி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் உரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவர். நியமன திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

***கவனத்திற்கு:***

(அ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அதற்கு இணையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

(ஆ) நியமனத்திற்காக தகுதி பெற்றதாக கருதப்படும் விண்ணப்பதாரர் ஒருவர், நியமனம் வழங்கும் நேரத்தில் நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறைகள் மற்றும் விதிமுறைகளின் கீழ் நியமனத்துக்கு தகுதியற்றவர் எனக் கருதப்பட்டால், அல்லது திருப்தியளிக்காத பணிச்செயல் அல்லது நடத்தை என கருதப்பட்டால், அந்த நியமனத்தை வழங்காமலிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உண்டு.

02. **எழுத்துப் பரீட்சை :**

I. இத்தேர்வு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் கொழும்பில் சனவரி மாதத்தில் நடாத்தப்படும். தேர்வு நடைபெறும் போது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் விதிமுறைகள் / வழிகாட்டுதல்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டாயமாக கட்டுப்பட வேண்டும்.

II. தேர்வு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும்.

III. விண்ணப்பிக்கும் போது தெரிவு செய்யப்பட்ட மொழிமூலத்தை பின்னர் மாற்றியமைக்க முடியாது.

IV. எழுத்துப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள்களை கொண்டிருக்கும்.

| *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சி புள்ளிகள்* |
|---|---|---|---|
| ஆவணங்களை பதிவு செய்தல் மற்றும் உரித்துப் பதிவு செய்தல் | 3.00 மணித்தியாலம் | 100 | 40 |
| விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் | 3.00 மணித்தியாலம் | 100 | 40 |

V. **பாடப் பரிந்துரை :**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடப் பரிந்துரை* |
|---|---|
| ஆவணங்களை பதிவு செய்தல் மற்றும் உரித்துப் பதிவு செய்தல் | • ஆவணங்களை பதிவு செய்யும் கட்டளைச் சட்டம்<br>• நொத்தாரிசு கட்டளைச் சட்டம்<br>• ஊழல் தடுப்பு சட்டம்<br>• முத்திரை கட்டணச் சட்டம்<br>• அற்றோனி அதிகார கட்டளைச் சட்டம்<br>• கட்டிட உரிமையாளர் பதிவு சட்டம்<br>• உரித்துப் பதிவு சட்டம்<br>• அரச காணிச் சட்டம்<br>• காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்<br>• அடகுச் சட்டம்<br>• இந்தச் சட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் |
| விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் | • விவாகப் பதிவு கட்டளைச் சட்டம்<br>• கண்டிய விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்<br>• முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம்<br>• பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம்<br>• இறப்பு பதிவு (விசேட நடைமுறைகள்) சட்டம்<br>• இராஜதந்திர மற்றும் தூதரக பணிகள் (Consular) கடமைச் சட்டம்<br>• தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் |

03. **சேவையில் நியமனம் சார்ந்த நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

i. அரசாங்க சேவையில் நியமனங்களை ஒழுங்கு படுத்தும் பொதுக் கட்டுப்பாடுகளோடு, 2012.05.22 திகதியில் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற, பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி உயர் தர அதிகாரிகள் வகைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், மற்றும் அவ் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு செய்யப்பட்ட அல்லது பின்பு செய்யப்பட்ட மாற்றங்கள், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு இப் பதவிக்கான நியமனம் வழங்கப்படும்.

ii. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. ஓய்வூதிய முறைகள் தொடர்பான அரசின் எதிர்கால கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாக காணப்படும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

iii. அதிகாரிகள் ஓராண்டு கால தகுதிகூர் காலத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.

iv. அவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனத்தை குறித்த நாளில் ஏற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

v. பொது நிருவாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின் விதிகளின்படி தொடர்புடைய அரசகரும மொழித் தேர்ச்சியினை பூர்த்தி செய்ய வேண்டும்.

vi. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவை நடைமுறை விதிகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடை முறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இந்த நியமனம் அமையும்.

vii. நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியான மொழி ஊடகம் என்பது, நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி ஆகும்.

04. **தகுதிகள் :**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினத்திற்குள், விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

I. ***அனுபவம் :***

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களத்தில், பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பு I ஆம் தரத்தில் தகைமைகளை பூர்த்தி செய்த நாளில் செயற் பாட்டில் உள்ள அதிகாரியாக இருத்தல்.

(ஆ) I ஆம் தரத்திற்கு உரிய வினைதிறன்காண் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல்.

(இ) விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப் பிடப்பட்ட காலத்திற்கு அண்மித்த (05) ஆண்டு களுக்குள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்ட ஒழுங்குமுறை குற்றச் சாட்டு கள் இல்லாது இருத்தல் வேண்டும்.

**வயது**: பொருத்தமற்றது.

II. ***உடல் தகைமைகள் :***

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கை நாட்டின் எந்தவொரு பகுதியில் பணியாற்றவும், பதவியின் பொறுப்புகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டிருக்க வேண்டும்.

III. ***ஏனைய தகைமைகள் :***

a. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

b. பதவிக்கு நியமனம் பெறுவதற்கு தேவையான அனைத்து தகுதிகளும், விண்ணப்பங்கள் சமர்ப் பிக்கப்படும் இறுதி தினத்திற்குள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

இலக்கம் 10/2025 இன் 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, இந்நியமனத்துக்கு உரித்தாகும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு, ரூ. 54,920 – 10 x 800 – 11 x 1,190 – 10 x 1,320 – 10 x 1,350 - ரூ. 102,710.00 (MN-7-2025)

06. **தேர்வு நிபந்தனைகள் :**

6.1 விண்ணப்பதாரர்கள் விரும்பும் ஒரு மொழியில் தேர்வில் பங்கேற்கலாம். விண்ணப்பதாரர்கள் இத்தேர்வின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தேர்வு

மொழியை மாற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அனைத்து வினாத் தாள்களுக்கும் சமுகமளிக்க வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது, நிகழ்நிலை முறையில் வழங்கப்படும் கீழ்க்கண்ட கட்டண முறைகள் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

i. எந்தவொரு வங்கியின் கடன் அட்டை மூலமாக (Any Bank Credit Card)

ii. இணைய பரிவர்த்தனை வசதி கொண்ட எந்தவொரு வங்கி அட்டையினால் (Any Bank Debit Card with Internet Transaction Facility)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை ஊடாக (Online Banking Method of Bank of Ceylon)

iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையின் ஊடாக (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்கண்ட முறைகளின் மூலம் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான வழிமுறை கள் இணையத் தளத்தில் தேர்வுக்கான தொழில்நுட்ப வழிகாட்டு தலின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் பெற்றுள்ளதாக குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். தேர்வு கட்டணத்தின் முழுத்தொகை செலுத்தப்பட வேண்டும்; குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப் பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட முறைகள் மூலம் தேர்வு கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் பிழைகளுக்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற் காது.

(இ) பரீட்சைக் கட்டணம் எக் காரணத்திற் காகவும் திரும்ப வழங்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்பட மாட்டாது.

6.3 இப் பரீட்சை 2026, சனவரி மாதம் கொழும்பில் நடைபெறும். தேர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

6.4 பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

6.5 நிகழ்நிலை (Online) தேர்வு விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியிலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கும் மென்பிரதி நகல் செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக் கொள்ளப்படாததா என்பது குறித்து, விண்ணப்பத்தை சமர்ப்பிக்க பயன்படுத்திய கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாக அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப் பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், தேர்வுக்கான விண்ணப்ப நடைமுறைக்காக வெளியிடப்பட்ட (Instructions) பதிவிறக்கம் செய்து, விண்ணப் பத்தை பூர்த்தி செய்யும் போது அதிலுள்ள வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினை பெற்ற பின்னர் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

6.6 வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு, விண்ணப்பங்கள், இறுதி தினத்திற்குள் அல்லது அதற்கு முன்னர், தேவையான பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அக்கட்டணத்தை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டுடன் முழுமையாக சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே, பரீட்சைகள் ஆணையாளரினால் நிகழ்நிலை முறையில் மாத்திரமே பரீட்சைக்கான அனு மதிபத்திரம் வழங்கப்படும். அனுமதிபத்திரம் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் இணையத்தள அறிவிப்பு மூலமாகவோ அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூல மாகவோ அறிவிக் கப்படும். அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர் இருந்தால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அதுகுறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் பரீட்சை ஒழுங்கமைப்பு பிரிவுடன் தொடர்புகொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்புகொள்ளும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பரீட்சை யின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்ட கோரிக்கை கடிதம் அறிவிப்பில் குறிப்பிடப் பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுவது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறான கோரிக் கையின் போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தினால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக, விண்ணப்பதாரர்

தன்னிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயாராக வைத்திருக்க வேண்டும். அனுமதிப்பத்திரத்தினை பரிசீலித்து திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமாயின், குறிப்பிட்ட காலத்திற்குள் பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின் அடிப் படையில் தொடர்புடைய திருத்தங்களை மேற் கொள்ள வேண்டும். தேர்வு மண்டபத்தில் திருத் தங்கள் செய்வதற்கான கோரிக்கைகள் பரிசீலிக் கப்படமாட்டாது.

6.7 அனுமதிப் பத்திரம் இன்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய அனுமதி வழங்கப்பட மாட்டாது. தேர்வு நடைபெறும் நாளில், விண்ணப்பதாரர் அவரது கையொப்பம் உறுதிசெய்யப்பட்ட அனுமதி பத்திரத்தை மாத்திரமே பரீட்சை மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சைக்குரிய அனுமதி பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிசெய்யப்பட்டிருத்தல் கட்டாய மாகும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை நிறுவன தலைவர் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய அதிகாரி மூலம் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.

6.8 பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது, விண்ணப்பதாரர் தேர்வில் பங்கேற்க தகுதி பெற்றவர் என்பதாக கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

6.9 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனு மதியின் அடிப்படையில் தேர்வினை பிற்போடுதல் அல்லது இரத்து செய்யும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்குரியதாகும்.

6.10 பரீட்சையில் பங்கேற்கும் ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தாம் பங்கேற்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பரீட்சை மண்டபத்தில், பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தி அடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப் படுத்துதல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களே செல்லுபடியானவையாக கருதப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

6.11 மேலும், பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் எந்தவித தொழில் நுட்ப தொடர்பாடல் சாதனங்களையும் அணியாமையை உறுதிப்படுத்தும் வகையில் செவிகள் தெளிவாகத் தெரியுமாறு பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத்திலிருந்து தேர்வு நிறைவடைந்து வெளியேறும் வரை முகத்தையும் செவிகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

07. **தேர்வு முடிவுகள் :**

இந்த அறிவிப்பின் 02 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளபடி, எழுத்து மூல பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% இற்கும் குறையாமல் மதிப்பெண்கள் பெற்ற விண்ணப்பதாரர்களில், எழுத்துப் பரீட்சையில் காணப்படும் திறன் அடிப்படையில் அமைக்கப்பட்ட முன்னுரிமை பட்டியல் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு வழங்கப்படும். தேர்வில் பங்கேற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையதளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

08. **போலியான தகவல் வழங்குவது :**

விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்ட ஏதாவதொரு தகவல் போலியானதாக அல்லது பிழையானதாக இணைத்துக் கொள்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் விண்ணப்பமானது இரத்து செய்யப்படும்.

இத்தகைய போலியான அல்லது பிழையான தகவல் இணைத்துகக்கொள்ளப்பட்ட பின்னர் கண்டறியப் பட்டால், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு எந்நேரத்திலும் சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

❖ ஏதேனும் வெற்றிட எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாதிருத்தல் எனும் விதிமுறைகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

09. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல்முறை விதிகள், காலத்திற்கு காலம் அரச சேவை தொடர்பான வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி உயர் தர அதிகாரிகள் வகைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அதில் மேற்கொண்ட திருத்தங்களின் நிபந்தனைகள் இந்நிய மனத்திற்காக பொருத்தமானதாகும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலின் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒற்றுமையற்றத் தன்மை தோன்றின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். ஆலோக்கபண்டார,
செயலாளர்.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2025, ஒற்றோபர் 31.

11-208

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

## இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

## Limited Competitive Examination for the Recruitment to the Grade III of the Sri Lanka Principals' Service – 2025

2014.10.22 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1885/31 ஆம் இலக்க இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் 2017.02.02 ஆந் திகதிய 2004/59 ஆம் இலக்க, 2018.06.19 ஆந் திகதிய 2076/14 ஆம் இலக்க, 2018.07.11 ஆந் திகதிய 2079/39 ஆம் இலக்க, 2020.12.30 ஆந் திகதிய 2208/18 ஆம் இலக்க, 2021.11.26 ஆந் திகதிய 2255/55 ஆம் இலக்க, 2025.09.18 ஆந் திகதிய 2454/54 ஆம் இலக்க அதன் திருத்தங்களுக்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2026, மாச்சு மாதம் நடைபெறும் என இதன் மூலம் அறியத் தரப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள அரசாங்க பாடசாலைகளில் காணப்படும் இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்குரிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக இந்த அறிவித்தலுக்குரிய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உரிய சகல தகைமைகளும் 2025.12.19 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கான வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்கள் மற்றும் மாவட்ட இலக்கங்கள்.

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* | *வெற்றிடங்கள் காணப்படும் மொழி மூலம்* |
|---|---|---|
| கொழும்பு | 01 | சிங்களம்/ தமிழ் |
| கம்பஹா | 02 | சிங்களம்/ தமிழ் |
| களுத்துறை | 03 | சிங்களம்/ தமிழ் |
| கண்டி | 04 | சிங்களம்/ தமிழ் |
| மாத்தளை | 05 | சிங்களம்/ தமிழ் |
| நுவரெலியா | 06 | சிங்களம்/ தமிழ் |
| காலி | 07 | சிங்களம்/ தமிழ் |
| மாத்தறை | 08 | சிங்களம்/ தமிழ் |
| அம்பாந்தோட்டை | 09 | சிங்களம்/ தமிழ் |
| யாழ்ப்பாணம் | 10 | தமிழ் |
| மன்னார் | 11 | தமிழ் |
| வவுனியா | 12 | சிங்களம்/ தமிழ் |
| முல்லைத்தீவு | 13 | சிங்களம்/ தமிழ் |
| கிளிநொச்சி | 14 | தமிழ் |
| மட்டக்களப்பு | 15 | சிங்களம்/ தமிழ் |
| அம்பாறை | 16 | சிங்களம்/ தமிழ் |
| திருகோணமலை | 17 | சிங்களம்/ தமிழ் |
| குருநாகல் | 18 | சிங்களம்/ தமிழ் |
| புத்தளம் | 19 | சிங்களம்/ தமிழ் |
| அநுராதபுரம் | 20 | சிங்களம்/ தமிழ் |
| பொலன்னறுவை | 21 | சிங்களம்/ தமிழ் |
| பதுளை | 22 | சிங்களம்/ தமிழ் |
| மொனராகலை | 23 | சிங்களம்/ தமிழ் |
| இரத்தினபுரி | 24 | சிங்களம்/ தமிழ் |
| கேகாலை | 25 | சிங்களம்/ தமிழ் |

இந்த அறிவித்தலில் "சேவை" என்ற பதமானது இலங்கை அதிபர் சேவையைக் குறிக்கும். "பிரமாணக் குறிப்பு" எனப்படுவது இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பினைக் குறிக்கும்.

02. **விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல்:**

2.1 விண்ணப்பப்படிவம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தின் "Our Services" இல் உள்ள "Online Applications – Recruitment Exams / E.B. Exams" பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை மூலமாக (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பணிகள் 2025, நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன், 2025, திசெம்பர் மாதம்

19 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்த பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சிட்ட பிரதியின் உரிய பகுதிகளை கையால் பூரணப்படுத்தி, விண்ணப்பதாரரின் கையொப் பத்தை உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்துகையுடன், விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

2.2 விண்ணப்பப் படிவத்தின் ஒரு பிரதியை தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும், மேலும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும்போது நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றையும் மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

2.3 விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்த வொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப் பதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

03. **பரீட்சைத் திகதி மற்றும் நகரங்கள்:**

3.1 இந்தப் பரீட்சை 2026, மாச்சு மாதத்தில் நடை பெறும். பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

3.2 கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாவிட்டால், அவர்கள் அதற்கு அண்மை யிலுள்ள நகரத்தின் பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத பரீட்சை நிலையத்தில் பரீட்சையை நடாத்துவதை இரத்துச் செய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் திற்கு அதிகாரம் உண்டு.

4. **சேவை நிபந்தனைகள்:**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவைகள் பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், அத்துடன் அந்த பிரமாணக் குறிப்பில் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

5. **சம்பள அளவுத் திட்டம் :** GE 04 - 2025

ரூ. 72,280 -7X1670 -6X2400 -25X2970 -172,620 (பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 10/2025 இன் III வது உப ஆவணத்திற்கமைய சம்பளம் வழங்கப்படும்)

6. **தகைமைகள் :**

6.1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்து சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட இலங்கை

ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்கள், இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவர்.

6.2 **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பெறப்பட்ட கல்விமானி பட்டத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொருதுறை யிலுமான பட்டத்தைப் பெற்றிருப்பதோடு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியைப் பெற்றிருத்தல்

a. பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது பாட உள்ளடக்கத்தில் "கல்விசார் பாடம்" தொடர்பில் ஆகக்குறைந்தது 50% உள்ளடக்கத்தைக் கொண்ட பாடம் சார்ந்த பட்டப் பின் கல்வி டிப்ளோமா
b. ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்
c. தேசிய போதனாவியல் டிப்ளோமா,

அல்லது

(iii) தேசிய போதனாவியல் டிப்ளோமா / ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

6.3 **அனுபவம் :**

(அ) மேலே 6.2 (i) அல்லது 6.2 (ii) இல் தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தையும், அத்துடன் அக் காலப்பகுதிக்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) மேலே 6.2 (iii) இல் தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஆறு (06) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருப்பதோடு, அக் காலப்பகுதிக்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்.

**குறிப்பு:** ஆட்சேர்ப்புத் தகைமைகள் கருத்தில் கொள்ளப்படும் 2025.12.19 ஆம் திகதியன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 01/2020 ஆம் இலக்கச் சுற்றுநிருபம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய, தாபனவிதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் குற்றங்கள் பற்றிய முதலாவது அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக தண்டனை வழங்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர், குறித்த குற்றம் இடம்பெற்ற திகதியில் இருந்து ஐந்து (05) வருட காலப்பகுதி வரையிலும், தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் குற்றங்கள் பற்றிய இரண்டாவது அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் சம்பந்தமாக தண்டனை வழங்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர், குறித்த குற்றம் இடம்பெற்ற திகதியில் இருந்து இரண்டு (02) வருட காலப்பகுதி வரையிலும், தாபனவிதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25.2 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான ஒழுக்காற்று நடைமுறையினூடாக ஒழுக்காற்றுத் தண்டனை வழங்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர், குறித்த குற்றம் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி வரையிலும், மற்றும் சேவை வெறிதாக்கல் அறிவித்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டைக் கருத்திற் கொண்டு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு உத்தியோகத்தர், மீளச் சேவையில் இணைக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு (02) வருட காலப்பகுதி தாண்டும் வரையிலும், இந்த ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரராகக் கருதப்படுவார். அத்தகைய தண்டனைகளைப் பெற்று உரிய காலப்பகுதி இன்னும் தாண்டாத உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தாலும் நியமனம் பெறுவ தற்கு உரிமை கோர முடியாது.

6.4 **உடலியல் மற்றும் உளவியல் தகுதி :**

அனைத்து விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்யவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

6.5 **ஏனைய தகைமைகள்:**

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு மூன்று (03) தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் அனுமதி இல்லை.

iii. அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான

சகல தகைமைகளும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியில் சகல வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

iv. இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக் கப்பட்டிருக்க வேண்டும்.

6.6 **வயது :**

2025.12.19ம் திகதிக்கு வயது 50 வருடங்களைத் தாண்டாதவராக இருத்தல் வேண்டும்.

(அதன்படி, 1975.12.18 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்தவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.)

07. **பரீட்சைக் கட்டணம் :**

7.1 பரீட்சைக் கட்டணம் ஆயிரத்து இருநூறு ரூபா (ரூ. 1200/-) ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை முறைமை (Online System) மூலம் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரமே கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

i) எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலமும் (Any Bank Credit Card)

ii) இணையக் கொடுப்பனவு வசதியைக் கொண்ட எந்தவொரு வங்கிப் பற்று அட்டை மூலமும் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கிச் சேவை முறை மூலமும் (Online Banking Method of Bank of Ceylon)

iv) இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையின் மூலமும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு -

(அ) மேலே உள்ள முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில் நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப் பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாகவோ அறிவிக்கப் படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்த வொரு காரணம் கொண்டும் திருப்பி வழங் கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சை யொன்றுக்காக மாற்றியமைக்கப்படமாட்டாது.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியானது செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பது நிகழ் நிலை முறைமையினுள் பிரவேசிப்பதற்காக பயன் படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக் கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூல மாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண் ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது அந்த அறிவுறுத்தல்களைத் தவறாமல் பின்பற்றுங்கள். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதி யைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லு படியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

8.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரம் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற முன்முடிவின் பேரில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்ப தாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் தால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் நிகழ் நிலை மூலமாகவே வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன், இலங்கை பரீட்சைத் திணைக்களம் அதைக் குறிப்பிட்டு இணைய அறிவித்தல் மூலமாகவோ/ விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூல மாகவோ அறிவிக்கும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவ ரேனும் இருப்பின், இணைய அறிவித்தலில்

குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவில் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கை கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது, பரீட்சைத் திணைக்களம் வினவும் ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நகல் பிரதி மற்றும் விண்ணப்பத்தைத் பதிவுத் தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதிப்பத்திரத்தைச் சரிபார்த்து திருத்தங்கள் இருப்பின் காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின்போது திருத்தங்களுக்காக முன்வைக்கப்படும் கோரிக் கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

09. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(i) விண்ணப்பதாரர் தனக்குரிய பரீட்சை மண்ட பத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும், மேலும் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்கு தோற்றும்போதே தனது கையொப்பத்தை அத்தாட் சிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

**குறிப்பு:** விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தை வழங்குவது, அவர்/அவள் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகுதியைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என்ற அங்கீகாரமாகக் கருதப்படக்கூடாது.

10. **ஆள் அடையாளம்:**

தாம் தோற்றிய ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையும் வகையில் ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பயணக் கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை :**

விண்ணப்பதாரர் ஒருவர் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் ஒருவர் ஏதேனும் விடயத்தை தவறானது என்று தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டால் அல்லது ஏதேனும் முக்கியமான விடயம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்தால், அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படலாம். பரீட்சை நடாத்துவது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குப் பரீட்சை விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுவார்கள். அந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறினால், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

12. **பரீட்சை மொழி மூலம் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்
(ii) விண்ணப்பதாரர்கள் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
(iii) விண்ணப்பதாரர் பரீட்சையின் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் தான் விண்ணப்பித்த மொழி மூலத்தில் மாத்திரம் விடையளிக்க வேண்டும்
(iv) விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

13. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

13.1 விண்ணப்பதாரர் ஒருவருக்குத் தனது விருப்பத் திற்கேற்ப வெற்றிடங்கள் காணப்படும் 03 மாவட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

13.2 ஒவ்வொரு மாவட்டத்திலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்கள் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை நேர்முகப் பரீட்சை நடாத்தப் படுவதற்கு முன்னர் பிரசுரிக்கப்படும்.

13.3 எழுத்து மூலப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விருப்பம் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அந்த மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கிற்கு குறையாத எண்ணிக்கையினர் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களின் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். (ஒரு மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை பத்து (10) இற்குக் குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் 20 இற்குக் குறையாத விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள்.)

**க.கொ -** விண்ணப்பதாரர் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் அதே மொழியில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும். ஆனால், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அனைத்து அலுவலர்களுக்கும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் மாத்திரமே நியமனங்கள் வழங்கப்படும். ஆங்கில மொழிமூலம் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் சேவைக்கு உள்வாங்கப்பட்டால், அவர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இல. 08/2020 (ஈ) ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கு அமைய இணைப்பு மொழியிலிருந்து விலக்களிப்பிற்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் 1. (iv) இற்கு அமைய, நியமனம் பெறுவதற்கு சிங்கள மொழிமூலமா அல்லது தமிழ் மொழிமூலமா என்பது கட்டாயமாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். அந்தக் பகுதியைப் பூரணப்படுத்தாத, 1.(i) இற்கு அமைய ஆங்கில மொழிமூலத்தைத் தெரிவுசெய்த விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவமாகக் கருதப்பட்டு நீக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மற்றும் நியமனம் பெறும் மொழி மூலம் தொடர்பான தகவல்களை எந்தவொரு காரணத்திற்காகவும் பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

13.4 பொது நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகள் மாத்திரமே பரிசோதிக்கப்படும், மேலும் அந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளும் அனைத்து விண்ணப்பதாரர்களும் கட்டமைப்பு செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். கட்டமைப்பு செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வது அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என்று கருதுவதற்கான உரிமையாகக் கருதப்பட மாட்டாது.

13.5 எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் தயாரிக்கப்படும் திறமை வரிசைப்படி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத் தெரிவு ஒழுங்கின்படி ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத் தெரிவு ஒழுங்கை எந்தவொரு காரணத்திற்காகவும் பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

13.6 மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு மாவட்டத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர், அந்த மாவட்டத்திற்கு வெளியே இட மாற்றம் பெறுவதற்காக ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட காலத்திற்கு அந்த மாவட்டத்தில் சேவை செய்ய வேண்டும். அவ்வாறு சேவை செய்ய இணங்காவிட்டால், அவரது நியமனம் இரத்துச் செய்யப்பட்டு, திறமைப் பட்டியலில் உள்ள அடுத்த விண்ணப்பதாரருக்கு சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13.7 ஒரு மாவட்டத்தில் உள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில், மீதமாக உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக மீண்டும் பொது மற்றும் கட்டமைப்பு செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

13.8 ஒரு மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த போதுமான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், அந்த மீதமாக உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக, முறையாக அந்த மாவட்டம் உரித்தாகும் மாகாணத்திலும் மற்றும் அகில இலங்கை மட்டத்திலும் உள்ள திறமை வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

13.9 எழுத்து மூலப் பரீட்சையானது 03 பாடங்களைக் கொண்டிருக்கும்.

| | *பாடம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *காலம்* |
|---|---|---|---|
| 01 | கிரகித்தல் | 100 | 1 ½ மணித்தியாலங்கள் |
| 02 | பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 03 | உளச்சார்பு மற்றும் பொது அறிவு | 100 | 1 ½ மணித்தியாலங்கள் |

- ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு, ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும்

13.10 **பாடத்திட்டம் :**

(i) **கிரகித்தல்:**

வசனங்களில் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றல், மொழிப் பயன்பாடு பற்றிய அறிவு மற்றும் சாராம்சப்படுத்துதல் பற்றிய அறிவு ஆகியவற்றை அளவிடுவதற்காக வினாக்கள் தயாரிக்கப்படும்.

(ii) **பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை:**

பாடசாலைகள் மற்றும் முகாமைத்துவத்தில் ஏற்படக்கூடிய சில சம்பவங்களை முன்வைத்து, அந்தச் சம்பவங்களுக்குப் பதிலளிப்பது மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான பரீட்சார்த்திகளின் கருத்துக்களை வெளிக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட வினாக்கள் சமர்ப்பிக்கப்படும்.

(iii) **உளச்சார்பு மற்றும் பொது அறிவு:**

சொல் அடிப்படையிலான, எண் கணித மற்றும் வடிவியல் பின்னணியில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரரின் முடிவுகள் மற்றும் பதில்களைப் பரிசோதிப்பதன் மூலம், விண்ணப்பதாரரின் புரிந்துணர்வுத் திறன் மற்றும் அறிவு, அத்துடன் தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் உள்ள பல்வேறு அமைப்புச் சூழல்களிலும் மற்றும் நமது சமூகத்திலும் நிலவும் கலாசார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார, புவியியல் மற்றும் ஏனைய பொருத்தமான காரணிகள் பற்றிய விண்ணப்பதாரரின் விழிப்புணர்வு மற்றும் அறிவை அளவிடுவதற்காக வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளாகத் தயாரிக்கப்படும். ஒவ்வொரு பகுதிக்கும் 45 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

13.11 **நேர்முகப் பரீட்சை :**

(i) **பொது நேர்முகப் பரீட்சை:**

எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதன் ஒழுங்கின்படி, வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள், விண்ணப்பதாரரால் சேவை செய்வதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்ட அவரது விருப்பங்களின் அடிப்படையில், பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன்போது ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலின் படி அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என பரிசோதிக்கப்படும். பொது நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அத்துடன், அந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளும் அனைத்து விண்ணப்பதாரர்களும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வது அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதுவதற்கான உரிமையாகக் கருதப்பட மாட்டாது.

(ii) **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை:**

அதிபரின் பணிகளுக்குரியதான ஒரு தலைப்பின் கீழ் முன்வைப்பு ஒன்றை செய்ய வேண்டும். அதற்காக பின்வரும் நியதிகளின் கீழ் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

| | *நியதிகள்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 04 |
| 2 | முன்வைப்புத் திட்டம் | 04 |
| 3 | முன்வைப்புத் திறன் | 08 |
| 4 | விடயம் சார் அறிவு | 05 |
| 5 | நேர முகாமைத்துவம் | 04 |
| | மொத்தம் | 25 |

விண்ணப்பதாரர்கள், எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளுக்காகப் பெற்ற மொத்தப் புள்ளிகளின்படி, அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதன் ஒழுங்கின்படி மாவட்ட ரீதியில் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப் படுவர்.

13.12 **பெறுபேறுகளை வெளியிடல் :**

வர்த்தமானி அறிவித்தலின் 13.9 எழுத்து மூலப் பரீட்சை மற்றும் 13.11 (ii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல், மாவட்ட ரீதியிலும் மொழி மூலத்தின் அடிப்படையிலும் தனித்தனியாக பரீட்சைத் திணைக்களத்தால் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப் படும். அனுமதி வழங்கப்பட்ட பின்னர், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்படும்.

14. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

14.1 இந்தப் பதவி நிரந்தரமானது. விதவைகள் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். ஒரு வருட கால தகுதிகாண் காலத்தின் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

14.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, நிதி பிரமாணக் குறிப்பு, சுற்றுநிருபங்கள், சட்டங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் ஆகியவை பொருந்தும்.

14.3 இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெற்று 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

14.4 பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 01/2014 இன் படி, பிற அரச மொழி தொடர்பான உரிய தேர்ச்சி மட்டங்கள் நியமனம் பெற்ற திகதியிலிருந்து 05 வருடங்களுக்குள் பெறப்பட வேண்டும்.

**குறிப்பு** – உத்தியோகத்தரின் இணைப்பு மொழியான ஆங்கில மொழித் தேர்ச்சியானது, 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையுடன் சேர்த்தே பூர்த்தி செய்யப்பட வேண்டும். அத்துடன், எந்தவொரு உத்தியோகத்தராவது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்காக ஆகக் குறைந்தது திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருந்தால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 08/2020 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இணைப்பு மொழித் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்.

15. இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயம் இருக்குமாயின், அது தொடர்பாகவும் இந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாகவும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

16. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு ஏற்படுமாயின், சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
2025.11.07.

11-244

## திருத்தம்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

2025, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதிய 2,459 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட "இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" பரீட்சை அறிவித்தலின் 9.0 தகைமைகள் பந்தியில் (உ) கல்வித்தகைமைகள் பிரிவின் கீழ் பின்வரும் குறிப்பு 3 சேர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பு 3 - 9.0 (உ) (1), (2) i மற்றும் (3) (i) இன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் "பட்டம்" எனும் தகைமை,

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப் படும் பட்டமொன்று

அல்லது

2. இலங்கை பாராளுமன்றத்தின் சட்டமொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று

9.0 (உ) (3) ii இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் "பட்டப்பின் பட்டம்" எனும் தகைமை,

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டப் பின் பட்டமொன்று

அல்லது

2. இலங்கை பாராளுமன்றத்தின் சட்டமொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டப்பின் பட்டமொன்று

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டமொன்று

02. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி அவ்வாறே வலுவிருக்கும்.

03. இப்போது வரை இந்த பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள், இந்த திருத்தத்தின் காரணமாக மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டாம் என அறிவிக்கப்படுகின்றது.

என்.யூ.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, நவெம்பர் 07.

11-243/1

---

## திருத்தம்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025

2025, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதிய 2,459 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட "இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025" பரீட்சை அறிவித்தலின் 8.0 தகைமைகள் பிரிவில் 8.1 கல்வித்தகைமைகள் உபபிரிவின் கீழ் பின்வரும் குறிப்பு 2 சேர்க்கப்பட்டுள்ளது.

**குறிப்பு 2** - 8.1 (1), (2) i மற்றும் (3) i இன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் "பட்டம்" எனும் தகைமை,

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்ட மொன்று

அல்லது

2. இலங்கை பாராளுமன்றத்தின் சட்டமொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று

8.1 (3) ii இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் "பட்டப்பின் பட்டம்" எனும் தகைமை,

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டப் பின் பட்டமொன்று

அல்லது

2. இலங்கை பாராளுமன்றத்தின் சட்டமொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டப்பின் பட்டமொன்று

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டமொன்று

02. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி அவ்வாறே வலுவிருக்கும்.

03. இப்போது வரை இந்த பரீட்சைக்காக விண்ணப்பித் துள்ள விண்ணப்பதாரிகள், இந்த திருத்தத்தின் காரணமாக மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டாம் என அறிவிக்கப்படுகிறது.

என்.யூ.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, நவெம்பர் 07.

11-243/2

## திருத்தம்

### பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2025

2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதிய 2,460 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள "இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2025" என்ற பரீட்சை அறிவித்தலில் ஆங்கில மொழிப் பிரதியில் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் பெயர்ப் பட்டியலில் பிரதேச செயலகப் பிரிவு இலக்கம் 5224 இன் கீழ் " Kalmuna - Tamil" என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள பெயரை "Kalmunai" என்றவாறு திருத்தியமைக்கிறேன். அவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் மாற்றங்களின்றி அவ்வாறே தொடர்ந்து காணப்படும்.

எஸ். ஆலோக்கபண்டார,
செயலாளர்.
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2025, நவெம்பர் 11.

11-264

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.